அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

EZHUNILAM

மாத இதழ் | மணம் 37 | ஜீன் 2024 | திருவள்ளுவர் ஆண்டு 2055

## ‘பொது வேட்பாளர்’ நடைமுறைச் சாத்தியமா?





## ரணிலுக்கு எதிராக வலுப்பெறும் மக்கள் அலை







## சுமந்திரன்: புதிய காலத்துக்கான அரசியல் முகம்?

## எங்கள் மண்

# எங்கள் மண்

இந்த மண் எங்களின்
சொந்த மண்
முப்பாட்டன் ஆண்ட
இயற்கை செழிக்கும்
வீரமும் தியாகமும்
நிறைந்த மண்.

இந்நிலம் தாண்டி
வேறெந்த நிலத்தையும்
நாம் நேசியோம் !

இது
புராணக் கதைகளில் உருவாகிய
நிலமல்ல..
ஆண்ட பரம்பரை நாம்
பிறந்து வளர்த்த நிலம்!!

அன்று
எங்களுக்கென்றொரு
எல்லை இருந்தது!
எங்களுக்கென்றொரு தனித்துவம்
இருந்தது!
எங்களுக்கென்றொரு
சுதந்திரம் இருந்தது !!

அங்கே
தொட்டால் சிணுங்கியும்
கள்ளிச்செடியும்
நாயுண்ணிப் பற்றையும்
செழிப்புற்றுத்தானிருக்கும்

பால்மணிக் கதிர்கள் தள்ளும்
பருவத்தில்
முத்தையன்கட்டு
வயல் வெளிகளோடு
பயணித்துப் பாருங்கள்
தாய் மடியின் சுகம் கிடைக்கும்!

பொன்னாவரசு பூத்திருக்கும்
விசுவமடுவும்
அச்சுவேலி கதலி வாழை இனிப்பும்
மன்னார் கட்டுக்கரைக் குளத்தின்
வெள்ளலையின் நுரைப்பூக்களும்
தருவதோ கோடி சுகம்!

இந்த மண்ணில்தான்
பல்லாயிரம்
உயிரற்ற உடல்களையும்
கொத்துக் குண்டின் சிதறல்களையும்
எரிந்த மரங்களின்
எச்சங்களையும் கண்டோம்!

புலம்பலில் இருந்து
ஆரம்பமாகும்
சுதந்திர ஆசைகளிற்கு
வசந்த கால மேகங்கள்
என்றோ ஒரு நாள் பூச்சொரியும்!!

இவை நாளும்
அல்லற்பட்டு ஆற்றாது
அழுத கண்ணீர் அன்றே.....

பிரபா அன்பு

EZHUNILAM
மாத இதழ் | மணம்: 37
ஜூன்

தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| சுமந்திரன்: புதிய... | 06 |
| ரணிலுக்கு எதிராக... | 10 |
| மோடியின்... | 12 |
| பொது வேட்பாளர்.... | 14 |
| கேள்விக்குறியாகும்... | 18 |
| சர்வதேச நீதிமன்றால்.... | 22 |
| பயணம் (கவிதை)... | 24 |
| கதிர்காம புனித... | 25 |
| கிழக்கின் குரல்... | 28 |
| சரித்திரம் கூறும்... | 31 |
| சோமாலியாவில்.... | 33 |
| தெற்காசிய நாடுகளுக்கான... | 36 |
| தலைநிமிர (கவிதை)..... | 38 |
| இடப்பெயர்வும் நானும்(பாகம்;05... | 39 |
| வாசிப்பினை ... | 41 |
| வலை (தொடர்கதை)... | 43 |
| திருக்கோவிலால்... | 46 |
















## திருக்குறள்

**குறள் 021:**

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு"

**விளக்க உரை:**

தமக்குரிய ஒழுக்கத்தில் வாழ்ந்து, ஆசைகளை அறுத்து, உயர்ந்த மேன்மக்களின் பெருமையே, சிறந்தனவற்றுள் சிறந்தது என்று நூல்கள் சொல்கின்றன.

4th

# அகவை 4 இல் காற் தடம் பதிக்கும்

அரசியல், சமூக, பொருளாதார இதழ்
எழுநிலம்

அட்டைப்படம் மிகவும் உணர்வுபூர்வமாக இருந்தது. மே மாதம் வந்தாலே மனம் கனத்து விடுகிறது. எதிர்பார்த்தது போலவே ஆக்கங்கள் அத்தனையும் மனதைத் தொடுவதாக இருந்தன. மணம் 36 சிறப்பு.

**இந்துமதி ராகவன்**
**ஜேர்மனி.**

புதிய அகவையில்
அடி எடுத்து வைக்கும்
எழு நிலமே !
சிறப்புற வளர்ந்து
எழு நிலமே!
வாழ்த்துகள்!

**சாவித்திரி**
**அத்துவிதானந்தன்.**
**லண்டன்.**

அனுர வந்துவிட்டால் தமிழர்களின் பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்று சிலர் உண்மையாகவே நம்புவது தெரிகிறது.

வரலாற்றை புரட்டிப் பாருங்களய்யா. கோபுரத்திலிருந்தா குப்பை மேட்டிலிருந்தா சிங்களன் ஆட்சிக்கு வருகிறான் என்பது முக்கியமல்ல. ஆட்சிக்கு வந்த எந்த சிங்களன் கையில் தமிழரின் இரத்தக்கறை படியவில்லை? இவனும் அதே குட்டையில் ஊறிய மட்டைதான்.

சிலவேளைகளில் சாயம் வெளுக்க மாதங்கள் ஆகலாம். அவ்வளவுதான். மணம் 36 அருமை. புதியவாழ்வு நிறுவனத்தின் விஜயலாதனுக்கு பாராட்டுகள்.

வெளிநாட்டுக் காசில் கேளிக்கை வாழ்வு வாழ்ந்து சீரழியும் இளைஞர்கள் மத்தியில் மாற்றுத் திறனாளியாக இருந்து இவ்வளவு வேலை செய்கிறீர்களே..

**நிலாந்தன் நாராயணன்**
**நியூயார்க்.**



## அக்கறை உறவுகள்

என்ன தெனாவெட்டு இருக்கும் அந்த சிங்கள பாதணி நிறுவனத்துக்கு? அருமையான ஆசிரியர் தலையங்கம்.

எங்களை ஒருவர் காரணமில்லாமல் இழிவு படுத்துகிறார் என்றால் அவர் எங்களைப் பார்த்து பொறாமைப்படுகிறார், எங்கள் தன்னம்பிக்கை பார்த்து பயப்படுகிறார் என்று பொருள்.

சிங்கள மோடயா அப்படித்தான் நடந்துகொள்வான். தகுதியற்றவங்கள்.

**உண்மை விளம்பி,**
**தாயகம்.**

வலை கதையில் கலாவைக் கொன்று விட்டீர்களே என்று நினைத்தேன். பார்த்தால். அது சரிதான்.

போதைப்பழக்கம் இந்த நிலைக்குத் தான் கொண்டுவந்து விடும். அதைத் தான் கண்கூடாக பார்க்கின்றோமே.. இடப்பெயர்வு கட்டுரை, கவிதை விமர்சனம் அனைத்தும் நன்று. புதியவாழ்வு நிறுவனம் இவ்வளவு செய்கிறார்களா? வாழ்த்துகள்.

முள்ளிவாய்க்கால் அவலங்கள் மணம் 36 முழுவதும் நிறைந்து இருப்பது யார் உணர்வைத்தான் தூண்டாது?

**யஸ்டின் தேவசகாயம்**
**டென்மார்க்.**

முள்ளிவாய்க்கால் அவலங்களை வாசிக்க தாங்க முடியவில்லை.

இடப்பெயர்வும் நானும் என்ற கட்டுரை அந்த நேரத்தில் மக்கள் பட்ட அவலங்களை கண்முன்னே மீளக் கொண்டு வருகிறது.

சர்வதேசம் என்றைக்கு ஒன்றுசேர்ந்து இந்த இனப் படுகொலையாளிகளுக்கு தண்டனை தருகிறதோ அன்றுதான் தமிழினம் கொஞ்சமாவது நிம்மதியடையும்.

**சிவகுமார் செல்லத்துரை**
**நியூசிலாந்து.**

நம்பிக்கையூட்டுவதாக இருக்கும் முல்லையின் கவிதை நன்று. பவானி கவிதையில் வாழ்ந்திருக்கிறார்.

அந்த அல்லல்களை அனுபவித்தவர் என்பது தெரிகிறது. துணிகரமான பெண் பத்திரிகையாளர் கட்டுரை எங்கள் பெண்களும் இப்படியான துறைகளில் வளர்ந்துவரும் உத்வேகம் கொடுக்கிறது.

**ரிச்சர்ட் அல்போன்ஸ்**
**சிட்னி.**

தேர்தல் ஒன்று வந்தாலும் வந்தது. எல்லோரும் தமிழ் மக்களைத் தேடத் தொடங்கி விட்டார்கள்.

இதில் துயரம் என்னவென்றால் தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கப் போகிறார்களாம், முழுதான 13 ஆ இல்லை வேறு ஏதாவதா என்று இப்போது விவாதிக்கிறார்களாம்.

தமிழர்களின் பிரச்சனை இப்போதுதான் அவர்கள் ஞாபகத்திற்கு வந்து தொலைத்திருக்கிறது.

**உமா மகேஸ்வரி சீராளன்**
**ஸ்பெயின்.**



எழுநிலம் சஞ்சிகையின் கடந்த மின்னிதழ்களை நூலகம் ஆவணகத்தின் இணையத்தளத்தில் இதழ்கள் பிரிவில் பார்வையிடலாம்...
https://www.noolaham.org

ஆசிரியர் பக்கம்

# ‘பொது வேட்பாளர்’ நடைமுறைச் சாத்தியமா?

கடந்த 2010 இல் மு. திருநாவுக்கரசு அவர்களால் பிள்ளையார் சுழி போடப்பட்ட ‘தமிழர்களுக்கான பொது வேட்பாளர்’ என்கின்ற கோட்பாடு அன்றிலிருந்து ஒரு பேசுபொருளாக உள்ளது. ஆனாலும் ஆரம்பத்தில் முதல் இரு தேர்தற் காலங்களிலும் எவராலும் பெரிதளவில் கருத்தில் எடுக்கப்படவில்லை. அதனைப் பரீட்சித்துப் பார்த்த குமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் போன்றவர்களும் அதன் முழு தார்ப்பரியத்தையும் புரிந்து கொள்ளாமல் நடைமுறைப்படுத்த முனைந்து தோல்வியைத் தழுவிய வரலாற்றை ஞாபகப்படுத்தாமல் பொது வேட்பாளர் என்ற பதம் ஆராயப் பட்டதுமில்லை.

2019 இல் நடந்த தேர்தற் காலத்தில் கொஞ்சம் மாறுபாடாக தமிழ் மக்கள் பேரவை ஒரு சுயாதீனக் குழுவை உருவாக்கி, அதன் மூலம் பொது வேட்பாளரை தேர்தலில் நிறுத்தலாம் என்றது. ஆனால் தமிழ்க் கட்சிகள், முக்கியமாக தமிழரசுக் கட்சி அதனை ஏற்றுக் கொள்ளாததால் அது அங்கேயே கை விடப்பட்டது.

இப்போது, தேர்தல் அறிவிப்பு வருவதற்கு சிறிது காலத்தின் முன்பே சுரேஷ் பிரேமச்சந்திரன் பொது வேட்பாளரை நிறுத்தி தமிழர் வாக்குகளைத் திரட்ட வேண்டும் என்று மொழியத் தொடங்கி விட்டார். அதற்கு ஐயா விக்கினேஸ்வரன் அவர்களின் பூரண ஆதரவும் கிடைத்தாயிற்று. சுமந்திரன் அவர்களுக்கு பொது வேட்பாளர் என்ற திட்டத்தில் உடன்பாடில்லை. அது சரி வருமா என்பதல்ல அவரின் பிரச்சனை. ‘மக்கள் எங்களைத் தெரிவுசெய்தார்கள். நாங்கள்தான் மக்களின் நலனிற்கான வழியை முடிவு செய்ய வேண்டும். கட்சி அரசியலே சிறந்தது’ என்பது அவரது தனிப்பட்ட பார்வை.

சம்பந்தன் ஐயாவோ ‘கழுவுகிற மீனில் நழுவுகிற மீன்’. சிங்கள மக்களை கோபமடையச் செய்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பவர். இப்போது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி பொது வேட்பாளரை நிறுத்துவது உறுதி என்ற முடிவை சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடாக அறிவித்து விட்டது. ‘மக்கள் மனு’ என்னும் சிவில் அமைப்பு ஒன்று இதற்கான பரப்புரையை நடத்துகிறது. இப்போது வேட்பாளரை கிழக்கிலிருந்து தெரிவு செய்யலாமா என்று ஆலோசிக்கப் படுவதாகவும் அறிய முடிகிறது. இது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் தேர்தற் புறக்கணிப்பு அரசியல் செய்து வந்தார்கள் அல்லது ஒரு துரோகியை வீழ்த்துவதாக எண்ணி இன்னொரு துரோகிக்கு வாக்களித்து அவனை பதவிக்கு கொண்டு வர உதவி புரிந்தார்கள். இதனால், தமிழ் மக்களின் வாக்குகள் மொத்தத்தையும் ஒரு பொது வேட்பாளர் மூலம் திரட்டி, ஒரு தேசியமாக உயர்ந்து நிற்பது என்பது நல்ல விடயம்தான்.


‘பொது வேட்பாளர்’ என்பவர் தமிழ் ஐக்கியத்தின் குறியீடு. அவர் தமிழர்களின் வாக்குகளை ஒன்றாகத் திரட்டுபவர். இதனால் அவர் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவராக இருக்க வேண்டும். அனைத்து தமிழ்க் கட்சிகளும் அவருக்கு தமது ஆதரவை வழங்க வேண்டும். அதே சமயத்தில் இவர் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதியும் அல்லர். அவர் தன்னிச்சையாக எந்த சிங்கள கட்சியுடனும் பேரம் பேசுபவராகவும் இருக்கக் கூடாது. தமிழர்களின் அதியுச்ச கோரிக்கைகளை அவர் தனது கோரிக்கையாக கொண்டிருப்பார்.

இந்தப் பொது வேட்பாளர் சுயநலமற்றவராகவும் இந்தத் தேர்தலில் அவருக்கு கிடைக்கும் பிரபல்யத்தை அவர் தனக்காக எங்கும் பயன்படுத்தாதவராகவும் இருப்பது அவசியம். அப்படிப்பட்ட ஒருவரைக் கண்டுபிடித்து வேட்பாளராக்க வேண்டும். பொது வேட்பாளர் என்று வெறுமனே அறிக்கை விடுவதோ அல்லது சில கூட்டங்களை நடத்துவதோ வெற்றி தராது. அதற்கு உழைக்க வேண்டும். வீடு வீடாகச் சென்று பேசவேண்டும். மக்களை தேசிய எழுச்சி கொள்ள வைக்க வேண்டும். வடக்கில் உள்ள மக்களின் அரசியல் தன்மை வேறு, கிழக்கில் வேறு. இரண்டையும் ஒரே முறையில் அணுக முடியாது வடக்கிலுள்ள மக்கள் சாதகமான நிலையில் இருந்து (comfort zone) அரசியல் பேசுவார்கள். கிழக்கு வாழ் மக்கள் இருவேறு சமூகங்களுக்கு மத்தியில் தப்பி உயிர்வாழ போராடிக்கொண்டு (survival zone) அரசியலை முன்னெடுப்பார்கள். இதனால் மக்களுக்கு இடையில் இறங்கி வேலை செய்து, அவர்களின் மனங்களை வென்று ஒரு தேசியமாகத் திரட்டுவது என்பது இந்தத் தேர்தலுக்கிடையில் சாத்தியமில்லை.

‘பொது வேட்பாளர்’ என்ற பேச்சினால் அச்சமடையும் சிங்கள பிரதிநிதிகள் தங்களுடன் பேரம் பேச வருவார்கள் என்பதுதான் தமிழ்க் கட்சிகளின் நோக்கம் என்பது மக்களில் ஒரு சாராரின் எண்ணம். வழமைக்கு மாறாக சிங்கள பிரதிநிதிகள் தமிழர் பகுதிகளில் கீழ் மட்டத்துக்கு இறங்கி பேசியதும் வாக்குறுதிகள் வழங்கியதும் இது சரிதானோ என்று எண்ணவும் வைக்கிறது.

எது எப்படியிருப்பினும் இம்முறை தேர்தலில் ‘பொது வேட்பாளர்’ சாத்தியமேயில்லை. இப்போதே இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தால் அடுத்த தேர்தலில் சாத்தியமாகினாலும் ஆகலாம். இடையில் ரணில் ஐயா தனது பதவிக் காலத்தை நீடிக்க செய்யும் பகீரதப் பிரயத்தனம் வெற்றி பெற்றால்.? தேர்தல் நடக்க வாய்ப்பிருக்காது. இவ்வளவு விவாதங்களும், விமர்சனங்களும், கூட்டங்களும், அறிக்கைகளும் வீணாகிவிடும்.

நடக்காத திருவிழாவிற்கு பந்தல் போடுகிறார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



கருணாகரன்

# சுமந்திரன்: புதிய காலத்துக்கான அரசியல் முகம்?

தமிழ்த் தேசிய அரசியலில் அநேகமாக எல்லா முடிவையும் எடுக்கும் ஆளாக இப்போது சுமந்திரன் வளர்ச்சி அடைந்துள்ளாரா? அல்லது தமிழ்ச் சூழலில் அப்படியொரு நிலை உருவாகியுள்ளதா? அல்லது அப்படிக் கருதப்படுகிறதா?

ஏனென்றால், தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை வெற்றியடைய வைப்பதற்கும் சுமந்திரன் தேவைப்படுகிறார். தமிழரசுக் கட்சியின் தலைவியைத் தீர்மானிப்பதற்கும் சுமந்திரனே தேவையாக இருக்கிறார். ஜனாதிபதித் தேர்தல் உட்பட அனைத்துத் தேர்தல்களையும் கையாள்வது, பதவியில் இருக்கும் ஆட்சியாளர்களோடு தொடர்புகளைப் பேணுவது, அவர்களைக் கையாள்வது, வெளிநாட்டுப் பிரதிநிதிகளோடு பேசுவது, முஸ்லிம்கள், மலையக மக்கள் என ஏனைய சமூகத்தினரோடு அரசியல் உறவைக் கொண்டிருப்பது எனச் சகலவற்றிலும் சுமந்திரனின் அடையாளமும் முன்னணிப் பாத்திரமுமே உள்ளது.

**இதை மேலும் விரிவாகப் பார்க்கலாம்**

சிலருடைய ஆர்வக் கோளாறினால் விளையாட்டாகத் தொடங்கப்பட்ட ‘தமிழ்ப் பொது வேட்பாளர்’ விடயம் இப்பொழுது





விடவும் முடியாது - தொடவும் முடியாது என்ற நிலைக்கு உள்ளாகியுள்ளது. இருந்தாலும் எப்படியாவது இதை வெற்றியடைய வைக்க வேண்டும் எனச் சிலர் தலையைக் கொடுத்து இரவு பகலாக வேலை செய்கிறார்கள்.

இதனால் இந்த 'விடாமுயற்சி விக்கிரமாதித்தியன்' களான 'சிவில் சமூகப் பிரமுகர்கள்' கூடச் சில நாட்களுக்கு முன்பு சுமந்திரனைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

உண்மையில் சுமந்திரனுடன் சந்திப்பைச் செய்வதற்கு இவர்களில் எவருக்கும் உடன்பாடில்லை. ஆனாலும் அதைவிட்டால் வேறு வழியில்லை என்ற நிலையிலேயே இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.

இதற்கான தூண்டலைச் செய்தவர் வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சர்களில் ஒருவர். அதைச் சிவில் பிரமுகர்களால் தவிர்க்க முடியாமல் போய் விட்டது.

'சுமந்திரனைச் சமாதானப்படுத்தி (Convince பண்ணி) னால்தான் தமிழரசுக் கட்சி, பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு ஆதரவளிக்கும். தமிழரசுக் கட்சி ஆதரவளித்தால் தான், ஏனைய கட்சிகளெல்லாம் இதை ஆதரிக்கும். இதைத் தவிர்த்து விக்கினேஸ்வரனோ சுரேஸ் பிரேமச்சந்திரனோ சிவில் பிரதிநிதிகளோ இந்த விடயத்தில் தனியே எதையும் செய்ய முடியாது என்றாகி விட்டது. ஆகவே, நீங்கள் தலையைப் பிடிக்க வேணும். தலையைப் பிடித்தால் தான் வால்களெல்லாம் கட்டுப்பாட்டுக்கு வரும்' என்று சொல்லியிருக்கிறார் அந்த முன்னாள் அமைச்சர்.

எனவே, உலகமெல்லாம் சுற்றி வருவதை விடவும் சுமந்திரனைப் பிடித்தால் போதும் என்ற கட்டத்தில் இந்தச் சந்திப்பு நடந்தது.

சந்திப்பின்போது 'பொதுவேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும்? அதற்கான அவசரமென்ன?' என்றொரு சாதாரண கேள்வியைத் தூக்கிப் போட்டிருக்கிறார் சுமந்திரன். சென்றவர்கள் கொஞ்சம் ஆடிப் போய் விட்டார்கள்.

இருந்தாலும், 'இந்தத் தேர்தலில் போட்டியிடும் முன்னிலை வேட்பாளர்கள் எல்லோரும் சிங்களவர்கள். இவர்களில் எவரும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தரக்கூடியவர்கள் இல்லை. அதைப்பற்றிப் பேசவே தயங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வாக்களிப்பதை விட, இந்தத் தேர்தலை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, சிதறுண்டிருக்கும் தமிழ்த் தரப்பையெல்லாம் ஒன்றாகக் கொண்டு வரலாம். தமிழ் மக்களுடைய நிலைப்பாட்டை தென்னிலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரியப்படுத்த முடியும். இது இன்றைய சூழலில் அவசியமானது.' என்று சொன்னார்கள்.

இதற்குப் பதிலளித்த சுமந்திரன், 'தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை. யார் யாரெல்லாம் போட்டியிடுவார்கள் என்று கூட இன்னும் உறுதியாகவில்லை. போட்டியிடும் தரப்பிலிருந்து தேர்தல் விஞ்ஞாபனங்களும் வரவில்லை. அதற்குள் எதற்கு இந்த அவசரமெல்லாம்? இப்போதுள்ள சூழலில் எல்லோரையும் நாம் சமநிலையில் வைத்தே பார்க்கிறோம். இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்கு முன்பு இதைப்பற்றி மக்களுடன் கலந்தாலோசிப்பதற்குத் திட்டமிட்டிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறார். சிவில் சமூகப் பிரதிநிதிகளால் சுமந்திரனை எந்த நிலையிலும் வழிக்குக் கொண்டுவர முடியவில்லை. இறுதியில் 'இதைப்பற்றி நாம் தொடர்ந்து விவாதிப்போம். அதற்குரிய ஏற்பாட்டைச் செய்கிறேன்' என்று சுமந்திரனே தொடர்ந்து கொண்டிருந்த தடுமாற்றத்துக்கு ஒரு முடிவைச் சொல்லி அனுப்பிவைத்தார்.

சுமந்திரன் சொன்னதைப்போல அடுத்து வரும் ஜூன் 09 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றிய பொது விவாதம் நடைபெறவுள்ளது. இந்த அறிவிப்பையும் சுமந்திரனே விடுத்துள்ளார். இதற்கிடையில் தமக்குச் சாதகமான வகையில் சிவில் அணியினர் வணிகர் கழகம், கூட்டுறவுச் சபை என ஓடியோடி பல்வேறு தரப்பினர்களையும் சந்திந்து ஆதரவு கோரி வருகின்றனர்.

இப்படியான உசாரோடு மக்களுக்கான வேலையைக் களத்தில் இறங்கிச் செய்திருந்தால், தமிழ்ச்சமூகம் இன்று கொஞ்சமாவது முன்னேற்றத்தைக் கண்டிருக்கும். பல பிரச்சினைகளுக்குத் தீர்வையும் எட்டியிருக்கலாம். நாட்டை விட்டு வெளியேறுவோரின் தொகையும் கணிசமாகக் குறைந்திருக்கும். இவர்களுடைய சொல்லுக்கும் பெறுமதி கிடைத்திருக்கும்.

இப்படி ஆட்பிடிப்பதற்கும் ஆதரவு சேர்ப்பதற்குமாக அலைந்து திரிய வேண்டி வந்திருக்காது. பொதுவேட்பாளரைப் பற்றிய பொது விவாதத்தின்போது இவ்வாறான விசயங்கள் எல்லாம் பேசப்படவும் கூடும்.

எனவே, ஒரு விடயம் மிகத் தெளிவாகி உள்ளது. தமிழ்த் தேசியப் பரப்பில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்த்தால், சுமந்திரன்தான் எதையும் தீர்மானிப்பவராக இருக்கிறார் என்பதுதான் அது. சுமந்திரனை மீறித் தமிழரசுக் கட்சியினாலும் எந்த முடிவுக்கும் செல்ல முடியாது. அதனுடைய புதிய தலைவர் தெரிவு உட்பட கட்சியின் அத்தனை நடவடிக்கைகளும் இன்று சுமந்திரனில்தான் தங்கியுள்ளன.

இது சற்று மிகைப்படுத்தப்பட்ட கூற்று எனச் சுமந்திரனே இதனை மறுக்கலாம். ஆனால், உண்மை என்னவென்று எல்லோருக்கும் தெரியும். என்பதால்தான் சுமந்திரனிடம் பொது வேட்பாளருக்கான அணி பகிரங்கமாகச் சரணடைந்திருக்கிறது. ஆனால், சுமந்திரனோ பொதுவேட்பாளர் என்ற நிலைப்பாட்டுக்கு எதிரானவர். அதை அவர் பகிரங்கமாகவே சொல்லியும் வருகிறார்.

இதனால் உண்டாகக் கூடிய அரசியல் சாதக - பாதக அம்சங்களையும் சுமந்திரன் அறிவார். இருந்தாலும் ஜனநாயக



அடிப்படையில் இதைப்பற்றிய விவாதமொன்றுக்கு அவர் முன்வந்திருப்பது பாராட்டுக்குரியது. இதுதான் சுமந்திரனின் இயல்பும் சிறப்புமாகும். பொதுச் சூழல் என்னவாக உள்ளது? பொது அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்றெல்லாம் பார்த்து, அதற்கேற்ற மாதிரிக் கதைக்காமல் (விழுந்த பக்கத்துக்குக் குறியைச் சுடாமல்) எது சரியாக இருக்கிறதோ, தான் எதைச் சரியென நம்புகிறாரோ அதைத் துணிந்து உரைப்பதே சுமந்திரனின் வழமை.

இதனால்தான் அவர் யாழ்ப்பாணத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், 'யாரும் என்னைத் துரோகி என்று சொல்வார்கள் என்பதற்காக என்னுடைய கருத்தைச் சொல்லாமல் விட மாட்டேன். என்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ள மாட்டேன்' என்று சொன்னதுமாகும்.

அரசியலில் எப்போதும் சரியான பார்வையும் அதை முன்னெடுக்கக் கூடிய துணிவும் அவசியமானவை. இவையிரண்டும் இல்லையென்றால், எத்தகைய மகத்தான கருத்தும் (கொள்கையும்) பயனற்றதாகி - பெறுமதியற்றதாகி - விடும். யாரும் மிகச் சிறந்த அறிவாளிகளாக இருக்கலாம். ஆனால், அந்த அறிவைச் செயலாக்கக் கூடிய ஆற்றலும் ஆளுமையும் வேண்டும். கூடவே சமகாலத்தன்மை மிக அவசியமானது.

சுமந்திரன் சமகாலத்தன்மைக்கு நெருக்கமானவர். அவர் முன்னெடுக்க முயற்சிப்பது, சமகால அரசியல் (Contemporary Politics). இதற்குக் காரணம், அவர் ஒரு நவீனத்துவவாதி (Modernist)யாக இருப்பதாகும். அவருடைய அரசியற் தன்மை, ஏறக்குறைய நவீனத் தன்மைக்குரியது (Modern politics). எவரோடும் உரையாடக் கூடியது.

இது முக்கியமான ஒன்று. நம்மிடம் எவ்வளவு சரிகள், நியாயங்கள் இருக்கிறது என்பது முக்கியமல்ல, எதிரே உள்ளவர்கள் அதை எப்படிப் பார்க்கிறார்கள்? எந்தளவுக்கு ஏற்றுக் கொள்கிறார்கள்? என்பதே முக்கியமானது. ஒரு கவிதையில் உள்ளதைப் போல, 'என்னுடைய சொற்களுக்கு எதிராளியின் மனதில் இன்னோர் அர்த்தம் உள்ளது' என்பதை ஆழ்ந்து புரிந்து கொள்வது அவசியமானது. இந்தப் புரிதல் இன்மையினால்தான் தமிழ்ச் சமூகத்தின் மாபெரும் தியாகங்களும் பேரிழப்புகளும் பயனற்றவை என்ற நிலைக்கு வந்தது.

சமகாலத்தன்மையைக் கொண்டவரும் நவீனத்துவ வாதிகளாகவே இருப்பர். அதைப்போல நவீனத்துவவாதிகள் சமகாலத்தன்மையோடு, எதிர்காலத்தைக் குறித்துத் தீர்க்கமாகச் சிந்திப்போராகவும் இருப்பர்.

இதை நாம் அரசியலில் மட்டுமல்ல, நடை, உடை, பாவனை உள்ளிட்ட அனைத்திலும் அவதானிக்க முடியும். இவர்களோடு சமூகத்துக்கு எப்போதும் ஒரு ஒவ்வாமை - முரண் - இருக்கும். சமனிலையில் சமூகத்தோடும் இவர்களுக்கு மறைமுகமாக ஒவ்வாமை - முரண் - காணப்படும். ஆனால், இவர்களுக்குப் பின்னால்தான் சமூகம் தன்னை மெல்ல மெல்ல ஒழுங்கமைத்துச் செல்கிறது.

மாற்றம் இவ்வாறானவர்களாலேயே நிகழ்வது. இதனால் இவர்களே வரலாற்றில் முன்னோடிகளாகக் கருதப்படுகிறார்கள். முன்னோடிகளின் காலில் முள் குத்தியே தீரும். அவர்கள் நடப்பது புதிய பாதை அல்லவா?

இதற்கு மாறாக ஒருசாரார் உள்ளனர். தங்களுடைய கைகளில் அப்பிள் (Apple Mobile phone) கைபேசியை வைத்திருப்பார்கள். நவநாகரீகமாக உடுத்திக் கொள்வார்கள். பிள்ளைகளைப் புதிய - நவீன துறைகளில் படிப்பிப்பார்கள். நவீனமாக வீட்டைக் கட்டுவார்கள், புதிய Model வாகனங்களை, புத்தம் புதிய பொருட்களையெல்லாம் வாங்கிக் கொள்வார்கள். ஆனால், அவர்களுடைய சிந்தனையும் நடைமுறையும் கடந்த காலத்துள் - இறந்த காலத்துள் - புதையுண்டிருக்கும். அவர்கள் அடிப்படையில் இறந்தகால மனிதர்களே (Dead people).

ஆனால், சுமந்திரனுக்கு எப்போதும் இந்தத் தருணம் (This is the opportunity) முக்கியமானது. அதையும் விட முக்கியமானது எதிர்காலமாகும். அதைப்பற்றியே அவர் சிந்திக்கிறார். அவருடைய நேர்காணல்கள், உரைகள், அணுகுமுறைகள், நடவடிக்கைகளில் இதை அவதானிக்க முடியும். ஒப்பீட்டளவில் அவர் கூடிய பட்சமான ஜனநாயகவாதி. இதனால்தான் அவர் முஸ்லிம்களோடும் நெருக்கமாக - அவர்கள் நெருங்கக் கூடிய ஒருவராக இருக்கிறார்.

தமிழ்த் தேசியப் பரப்பில் சுமந்திரன் அளவுக்கு முஸ்லிம்களோடு நெருக்கமான

> சுமந்திரனுடைய தமிழரசுக் கட்சியோ கடந்தகாலம் - சமகாலம் என இரண்டிலும் அல்லாடிக் கொண்டிருப்பது. இந்த இழுபறியும் மோதலுமே சிறிதரன் - சுமந்திரன் அணி மோதல் கூட. சிறிதரன் கடந்த காலத்தின் அடைக் கோழியாகவும் சுமந்திரன் புதிய காலத்துக்கான குஞ்சுப் பறவையாகவும் உள்ளனர். ஆயினும், இதுதான் அவருக்கு உள்ளூரில் எதிர்ப்பையும் வெளியே கவர்ச்சியையும் கொடுக்கிறது.



தலைவர்கள் குறைவு. இன்னொருவர் திரு. சம்மந்தன். இதைப்போல சிங்களப் பரப்பிலும் மலையக மக்களோடும் சுமந்திரனுக்கு ஊடாட்ட உறவுண்டு.

நாடாவிய பிரச்சினைகளில் அவர் காட்டுகின்ற ஆர்வமும் அவற்றில் சுமந்திரன் நிகழ்த்துகின்ற இடையீடுகள், தலையீடுகளும் அவருக்கான பரந்த அறிமுகத்தையும் முக்கியத்துவத்தையும் அதிகரித்திருக்கின்றன. இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் சுமந்திரனும் சம்மந்தனும் தனிப்பட நடந்து கொள்ளும் விதம் ஒரு அரசியற் தலைவர்களுக்கு உரியதாக இருப்பதில்லை. குறிப்பாக பலரையும் இணைத்துப் பயணிக்கும் பொறுமையும் நிதானமும் இருவரிடத்திலும் குறைந்தே உள்ளது. இது பெருங்குறைபாடாகும்.

சுமந்திரனுடைய தமிழரசுக் கட்சியோ கடந்தகாலம் - சமகாலம் என இரண்டிலும் அல்லாடிக் கொண்டிருப்பது. இந்த இழுபறியும் மோதலுமே சிறிதரன் - சுமந்திரன் அணி மோதல்கூட. சிறிதரன் கடந்த காலத்தின் அடைக் கோழியாகவும் சுமந்திரன் புதிய காலத்துக்கான குஞ்சுப் பறவையாகவும் உள்ளனர். ஆயினும், இதுதான் அவருக்கு உள்ளூரில் எதிர்ப்பையும் வெளியே கவர்ச்சியையும் கொடுக்கிறது.

தமிழ்த் தேசிய அரசியற் பரப்பிலுள்ள பலரும் அறிந்தோ அறியாமலோ கடந்த காலத்தில் உறைந்தவர்களாகவே (Nostalgist) உள்ளனர். அவர்களுக்கு அதுவொரு சுவையான இன்பம். அதுவொரு பொற்காலம். தங்க நினைவு. அவர்களுடைய அரசியலும்தான் அப்படியிருக்கும்.

ஆனால், சொந்த வாழ்க்கையோ சமகாலத்தோடு - Apple Mobile phone னோடு மிகத் தீவிரமாகப் பிணைந்திருக்கும். இந்த முரணைப் பற்றி அவர்கள் மனந்திறந்து ஒரு நிமிடம் யோசித்தால் போதும், நல் மாற்றங்கள் நிகழும்.

மிகச்சிலரே இதைக் கடந்தவர்கள். புதிய சகாப்தம் (Entering into a new era) ஒன்றுக்குச் செல்ல வேண்டுமானால், இறந்த காலத்திலிருந்து மீண்டெழ (Resurgence from past&end politics) வேண்டும். அரசியல் அர்த்தத்தில் சொல்வதானால், கடந்த காலப் படிப்பினைகளிலிருந்து பெற்றுக் கொண்ட அறிவைக் கொண்டு நிகழ்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அதிலிருந்து எதிர்காலத்தை மேம்படுத்த முடியும். அதற்கு இந்தத் தருணத்தை - இந்தச் சந்தர்ப்பத்தை - இந்தக் காலத்தைச் சரியாக, உரிய முறையில் விளங்கிச் செயற்பட வேண்டும். அதாவது தன்னுடைய காலமாக உணர்தல் - Perception in his own time. அப்படிச் சிந்தித்தால்தான் கிடைத்த வாய்ப்பைத் தன்னுடையதாக (Taking his turn) மாற்றிக் கொள்ள முடியும்.

ஏறக்குறைய சுமந்திரன் அப்படிச் சிந்திக்கிறார் என்பது எனது கருத்து. என்பதால்தான் தன்னால் இந்தக் காலத்தை மாற்ற முடியும் என அவரால் நம்ப முடிகிறது. ஆனால், அதற்கு நிறைய வேலை செய்ய வேண்டும். அதைத் தனியே செய்ய முடியாது. அதற்கான ஆளணி, கட்டமைப்புகள், செயற் திட்டங்கள், மக்கள் இணைப்புகள், அர்ப்பணிப்பான உழைப்பு எனப் பலவும் தேவை.

அதற்கான பயிற்சியை - முயற்சியை அவர் எடுக்க வேண்டும். முக்கியமாக மக்களுடனான உறவையும் அரசியற் பரப்பில் யதார்த்தமாகச் சிந்திக்கக் கூடிய தரப்புகளின் இணைவையும் சாத்தியப்படுத்த வேண்டும்.

இதுவரையில் சுமந்திரன் போட்டதெல்லாம் சிறு புள்ளியே. இனி அதை வளர்த்து ஒரு வடிவமாக்க வேண்டுமானால் அதற்கான வேலைகள் அவசியமாகும். எந்தச் சிறு வாய்ப்பையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் ஆற்றல் அவரிடம் உண்டு என்பதால், வாய்ப்புகளை உருவாக்கும் ஆற்றலையும் அவரால் வளர்த்துக் கொள்ள முடியும் என நம்புகிறேன். இதற்கு அவர் மக்களிடம் பல படிகள் இறங்கி வர வேண்டும். இல்லையென்றால் வரலாற்றின் தெரிவு வேறொன்றாகிவிடும்.



> தமிழ்த் தேசியப் பரப்பில் சுமந்திரன் அளவுக்கு முஸ்லிம்களோடு நெருக்கமான தலைவர்கள் குறைவு. இன்னொருவர் திரு. சம்மந்தன். இதைப்போல சிங்களப் பரப்பிலும் மலையக மக்களோடும் சுமந்திரனுக்கு ஊடாட்ட உறவுண்டு.



# ரணிலுக்கு எதிராக வலுப்பெறும் மக்கள் அலை

சு.நிஷாந்தன்

தீர்க்கமான ஓர் அரசியல் சூழலையை இலங்கைத் தீவு எதிர்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி, ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க பொதுவாக்கெடுப்பை நடத்த முன்வந்துள்ளது.

**ரணில் விக்ரமசிங்கவை தாக்கம் செலுத்தியுள்ளது**

குறிப்பிடத் தக்களவான அரசியல் மற்றும் சமூக அதிருப்தியின் பின்னணியிலேயே இந்த நிலைக்கு அரசாங்கம் நகர்ந்துள்ளது. இப் பரிந்துரையின் பின்னணியில் உள்ள உள்நோக்கங்கள் பல்வேறு கேள்விகளை எழுப்புகின்றன.

தேசிய மக்கள் சக்தியின் (NPP) தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஜனாதிபதித் தேர்தலில் 61% வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என்று அமெரிக்க அமைப்பு ஒன்றினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் தெரிய வந்துள்ளமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவில் தாக்கம் செலுத்தியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.தே.கவின் இந்த நகர்வு பொருளாதாரத்தை



ஸ்திரப்படுத்த இன்னும் கால அவகாசம் தேவை என்ற சாக்குப் போக்கின் கீழ் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான வழிகளை தேடுவதற்கு ரணில் விக்ரமசிங்கவை தூண்டியுள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்மொழிவு, இலங்கையில் உள்ள பல்வேறு மக்கள் குழுக்கள் அதிருப்திக்கு உள்ளாக்கியுள்ளது.

### தமிழர்கள் அதிருப்தியில்..

தமிழ் சமூகத்தை ஏமாற்றியவர்களாக கருதப்படும் ராஜபக்சர் குடும்பத்துடன் ரணில் விக்ரமசிங்க தொடர்ந்தும் ஒத்துழைத்து செயல்பட்டு வருகின்றமைக்கு தமிழ் மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். யாழ் நூலகம் எரிப்பு முதல் தமிழர்களுக்கு எதிராக இலங்கைத் தீவில் மேற்கொள்ளப்பட்டுள்ள அநீதிகளின் பின்னிணையில் ஐ.தே.கவும் ராஜபக்சர்களுமே இருந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கிய தலைவர் கருணாவை ஐ.தே.க.வில் சேர்த்தமை உட்பட பல்வேறு காரணங்களால், தமிழ் மக்களின் சுயாட்சிக்கான சாத்தியக் கூறுகளை குறைக்கும் சர்வதேச பொறிமுறைகளை மேற்கொண்டவராக கருதப்படும் ரணிலுக்கு, ராஜபக்சர்கள் வெல்லக்கூடாது என்பதற்காகவே பல சந்தர்ப்பங்களில் தமிழர்கள் உதவியுள்ளனர். ஆனால், இன்று தமது அதிகார பேராசையால் ராஜபக்சர்களையும் ரணில் அரவணைத்துச் செல்கிறார்.

### முஸ்லிம் சமூகத்தின் விரக்திகள்:

முன்னைய SLPP அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட பலவந்த தகனங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை நியமிப்பதில் தயக்கம் காட்டுவதால் முஸ்லிம் சமூகம் ரணில் மீது கடும் அதிருப்தியடைந்துள்ளது.

அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கு இடமளிக்காமை உட்பட பல்வேறு காரணிகளால் முஸ்லிம்களின் வாக்கை இம்முறை ரணில் விக்ரமசிங்கவால் பெற முடியாதென அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க அதிருப்தி:

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பொறுப்பான நபர்களுடன் ரணில் விக்ரமசிங்கவின் தொடர்புகள் மற்றும் விசாரணைகளை நெறிப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதிப்படுத்தத் தவறியமை உள்ளிட்ட காரணிகளால் கிறிஸ்தவர்களும் கத்தோலிக்கர்களும் ரணில் மீது அதிருப்தி அடைந்துள்ளனர்.



### பௌத்த பெரும்பான்மை மக்களின் கவலைகள்:

அதிகாரப் பகிர்வு தொடர்பான ரணிலின் கருத்துக்களால் பெரும்பான்மையான பௌத்த மக்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். இது தேசிய ஒற்றுமைக்கு பாதிப்பாக அமையும் என அவர்கள் நம்புகின்றனர்.

### பொருளாதாரச் சிக்கல்கள்:

இலங்கையின் பொருளாதாரம் தொடர்ந்து நெருக்கடியான நிலையிலேயே இருந்து வருகிறது. மில்லியன் கணக்கான குடிமக்கள் வெளிநாட்டில் வேலை தேடும் முயற்சிகளிலேயே தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இளைஞர்கள் அரசாங்கத்தின் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர்.



### அனுபவமற்ற நியமனங்கள்:

குறைந்த நிபுணத்துவம் கொண்ட நபர்களை முக்கிய பதவிகளுக்கு நியமித்ததற்காக ஜனாதிபதி விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார். தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்கவின் பின்னணி, காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜேவர்தனவுக்கு பொருத்தமான தகுதிகள் இல்லாமை ஆகிய இரண்டும் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளன.

### எதிர்க்கட்சி இயக்கவியல்:

சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சி, அமெரிக்க அமைப்பின் கணக்கெடுப்பின்படி 16% வாக்களை மட்டுமே பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. சஜித் பிரேமதாச நடைமுறை ஆட்சிக்கு பொருந்தாத யோசனைகளை முன் வைப்பவராக கருதப்படுகிறார். இதனால் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவை பல வாக்காளர்கள் தேட நிலைமை மிகவும் சாதகமாக அமைந்துள்ளது.

இந்தக் காரணிகளின் அடிப்படையில், ஐ.தே.க வால் முன்மொழியப்பட்ட பொது வாக்கெடுப்பு, தற்போதைய ஆட்சிக்கு சாதகமாக இல்லாத தேர்தல் முடிவை தாமதப்படுத்தும் முயற்சியாகவே தெரிகிறது.



# மோடியின் வெற்றி இலங்கைக்கு நன்மையே

இந்தியாவில் தனிப் பெரும்பான்மை உடனான ஆட்சியையே இலங்கையில் ஆளும் அரசாங்கங்கள் எப்போதும் விரும்புகின்றன. ஜவகர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி காலம் முதல் தென்னிலங்கையின் தலைமைகள் தனிப் பெரும்பான்மையுடனான இந்திய அரசாங்கத்தையே விரும்புகின்றன.

அதற்கு மிக முக்கிய காரணம் தமிழ் மக்களுக்கு எதிராக குரல் தென்னிந்தியாவிலிருந்து ஒலித்துவிடக் கூடாதென்பதற்கே. கூட்டணி அரசாங்கங்கள் அமையும் காலத்தில் இலங்கையை ஆளும் தலைவர்கள் இந்திய பிரதமர்களுடன் மிகவும் நெருக்கமாக செயல்படுவதும் நிதர்சனம்.

## சர்வதேச அரங்கில் முடக்கியதும் இந்தியாவே

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் காங்கிரஸின் ஆட்சி நிலவியது. அப்போதும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தியுடன் என்றுமில்லாதவாறு நெருக்கமாகச் செயற்பட்டார்.

இறுதி யுத்தத்தில் இலங்கைக்கு பாரிய உதவிகளை இந்தியா வழங்கியதாக தமிழ் மக்கள் கடுமையான குற்றச்சாட்டுகளையும் சர்வதேச அரங்கில் முன்வைத்திருந்தனர். அதேபோன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக தமிழ் மக்களின் சுயாட்சிக்கான கோரிக்கையை சர்வதேச அரங்கில் முடக்கியதும் இந்தியாவே.

## தென்னிந்திய மாநிலங்களின் கருத்து

13ஆவது திருத்தச்சட்டத்தின் பின்னர் ஒற்றையாட்சிக்குள் அதன் அடிப்படையிலான தீர்வையே



சர்வதேசமும் வலியுறுத்த ஆரம்பித்தது. என்றாலும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வில் இருந்து ஈழத் தமிழர்கள் இன்னமும் பின்வாங்கவில்லை.

கடந்த இரண்டு முறை பாரதிய ஜனதா கட்சி தனிப் பெரும்பான்மையுடன் மத்தியில் ஆட்சியமைத்தது. ஆனால், இம்முறை கூட்டணி ஆட்சியை அமைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இது இந்தியாவின் ஜனநாயகத்துக்கும் மாநிலங்களின் உரிமைகளுக்கும் பலமானதாக இருக்கும் என்பது தமிழகம் உட்பட தென்னிந்திய மாநிலங்களின் கருத்தாக உள்ளது.

## மோடி வாடிக்கையாக கொண்டிருந்தார்

பாஜகவின் கடந்த 8 ஆண்டு ஆட்சியில் வட மாநிலங்கள் மாத்திரமே செழிப்பாக இருந்ததாக தமிழ்நாடு உட்பட பல மாநில முதல்வர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்ததுடன், அவர்களது கோரிக்கைகளையும் பாஜக அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை என்றும் குற்றம் சுமத்தினர்.

குறிப்பாக ஈழத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் உரிமைகள் தொடர்பில் பாஜகவால் கொடுக்கப்பட்ட எந்தவொரு வாக்குறுதிகளும் கடந்த 8 ஆண்டுகளில் மோடி அரசாங்கத்தால் நிறைவேற்றப் படவில்லை.

தமிழகத்துக்கும், இலங்கைக்கும் பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் தமிழ் மக்களின் உரிமைகள் பற்றியும் இலங்கை வாழ் மற்றும் மலையகத் தமிழர்கள் பற்றியும் பேசுவதை மோடி வாடிக்கையாக கொண்டிருந்தார். தேர்தல் சமயத்தில் ஒலித்த கச்சத்தீவு விவகாரமும் அவ்வாறானதுதான்.

## மோடியின் வெற்றி இலங்கைக்குச் சாதகம்

மலையக தமிழர்களுக்காக முன்மொழியப்பட்ட 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை மாத்திரமே மோடி நிறைவேற்றியதுடன், 10 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான நிதி ஒதுக்கீடுகளை முழுமையாக மேற்கொள்ளவில்லை. மலையகத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பில் அவர் எவ்வித கருத்துகளையும் இன்றுவரை முன்வைக்கவில்லை.

13 ஆவது திருத்தம் தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் மோடி பேசியுள்ளார். ஆனால், அதனையாவது நடைமுறைப் படுத்துவதற்கு ஆக்கப்பூர்வமான அழுத்தங்கள் எதனையும் இலங்கை அரசாங்கத்துக்கு அவர் கொடுக்கவில்லை. அதனைத்தான் இலங்கையும் விரும்புகிறது.

'இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வெற்றி இலங்கைக்குச் சாதகமாக அமையும்' என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கூறியுள்ளார்.

## தமிழகமே தீர்மானிக்கும்

இலங்கையை ஆண்ட மற்றும் ஆளும் தலைவர்களது விருப்பத்தையே கடுமையான இனவாதக் கருத்துகளை வெளிப்படுத்தும் நபராக தமிழ் மக்களால் பார்க்கப்படும் கம்மன்பில வெளிப்படுத்தியுள்ளார். இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி கூட்டணி 300 முதல் 350 ஆசனங்களைக் கைப்பற்றக்கூடும் என எதிர்பார்த்தேன். எப்படி இருந்தாலும் பிரதமர் மோடியின் வெற்றி இலங்கைக்கு நன்மை பயக்கும்.

ஏனெனில் இந்தியாவில் நிலையான தொரு ஆட்சி இருக்கும்போது, இலங்கை தொடர்பான கொள்கையை மத்திய அரசே தீர்மானிக்கும். சிலவேளை, மத்திய அரசு பலவீனமாகி, ஆட்சியமைக்க தமிழ் நாட்டின் உதவி தேவைப்படும் பட்சத்தில் இலங்கை தொடர்பான கொள்கையைத் தமிழகமே தீர்மானிக்கும்.

அப்போதுதான் இரு நாட்டுக்கும் இடையிலான உறவில் தாக்கம் ஏற்படும். எனினும், தமிழகத்தின் ஆதரவின்றி மோடி வெற்றி பெற்றிருப்பது இலங்கைக்கு நல்லதே. எனவும் கம்மன்பில கூறியுள்ளார்.

## இந்தியாவின் பாராமுகம்

இந்தியாவின் பிரதமராக நரேந்திர மோடி 9 ஆம் திகதி பதவியேற்க உள்ளார். பதவியேற்பு விழாவுக்காக புதுடெல்லி கோலாகலமாக தயார்ப்படுத்தப் பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட தெற்காசியாவின் சில முக்கிய தலைவர்களுக்கு மோடியின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்ள அழைப்பு வந்துள்ளது.

இந்தியாவில் பன்மைத்துவத்தை தமிழ் மக்கள் வரவேற்றாலும், ஈழத் தமிழர்கள் மீதான இந்தியாவின் பாராமுகம் தொடர்பில் பெரும் கவலையுற்றுள்ளனர்.

இந்தியாவில் தமிழகத்தின் பங்களிப்புடனான கூட்டாட்சி முறையையே தமிழர்கள் விரும்புகின்றனர். அதன்மூலம் தமிழ் மக்களின் உரிமைகளாவது இந்திய நாடாளுமன்றத்தில் பேசப்படும். அல்லது மத்தியில் ஓரளவுக்காவது அழுத்தங்கள் கொடுக்கப்படும்.

ஆனால், அதனை தென்னிலங்கை சிங்கள அரசியல் தலைவர்கள் விரும்பவில்லை என்பதே கம்மன்பிலவின் கருத்து வெளிப்படுத்துகிறது. இது கம்மன்பிலவின் கருத்து மாத்திரமல்ல என்பதும் நிதர்சனம்.





கருணாகரன்

# பொதுவேட்பாளர் ‘என்கிற மாயமான்’

‘தமிழ் மக்கள் தேசமாகத் திரள வேண்டும்’ என்பதை மந்திர உச்சாடனம் போல, ஒரு சாரார் தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தொடக்கம் ‘தமிழ்ப் பொது வேட்பாளர்(?)’ என்ற எண்ணக் கருவை வலியுறுத்துவோர் வரையில் இதில் உள்ளடக்கம்.

அப்படித் தேசமாகத் தமிழ் மக்கள் திரண்டால் அதற்கு அடுத்த கட்டமாக என்ன செய்வது என்று இவர்களுக்குத் தெரியாது. அதைப்பற்றி அவர்கள் எங்கேயும் எதுவும் சொன்னதில்லை. (சொல்லப்போவதுமில்லை. ஏனென்றால் அதைப்பற்றி இவர்களுக்கு எதுவுமே தெரியாது).

அதைச் சொல்ல வேண்டுமானால், அதற்குரிய செயலுக்குச் செல்ல வேண்டும். அது ஒரு போராட்டம். அதைப்பற்றி முறையாகத் திட்டமிட வேண்டும். அது ஒரு பெரும்பணியாகும். அதற்கான அர்ப்பணிப்பையும் உழைப்பையும் கொடுக்க வேண்டியிருக்கும்.



இப்போதுள்ளதைப்போல தேர்தல் கூட்டுக்காக (பதவிகளுக்காக) மட்டும் கட்சிகள் கூடிப் பேசுவதோ, அதே தேர்தல் விடயங்களுக்காக உடைந்து உடைந்து பிரிந்து செல்வதோ அல்ல.

அதைப்போல ‘சிவில் சமூகப் பிரதிநிதிகள்’, ‘பல்கலைக்கழகசமூகத்தினர்’ என்ற போர்வையில் அரசியற்கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவதாலோ, அவர்களுடைய மேடைகளைப் பகிர்வதாலோ எந்தப் புத்தாக்கமும் நிகழ்ந்துவிடாது. அல்லது புலம்பெயர் ஊட்டங்களுக்காகவும் சில தொண்டு அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்காகவும் ஓடித்திரிவதாலும் தமிழரின் அரசியலில் முன்னேற்றத்தைக் காண முடியாது.

இந்தத் தரப்புகளோடு மல்லுக்கட்டுவதை விட மக்களிடம் சென்று வேலை செய்தால், அது அந்த மக்களுக்கான ஆறுதலாகக் கூட இருக்கும்.

யுத்தம் முடிந்த கையோடு பாதிக்கப்பட்ட பிரதேசங்களில், பாதிக்கப்பட்ட மக்களோடு உளஆற்றுகைப் பணியில் ஈடுபட்டுவரும் மருத்துவர்களோடு வேலை செய்கின்ற அனுபவத்தில் சொல்கிறேன். லட்சக்கணக்கான மக்கள் உள நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடி, அரசியல் நெருக்கடி எனப் பல பிரச்சினைகளிலிருந்து மீள முடியாமல் தத்தளிக்கின்றனர்.

சொந்த மக்கள் (உடன் பிறந்தவர்களைப் போன்றவர்கள்) இப்படி நெருக்கடியில் தவிக்கும்போது எப்படி உங்களால் இந்த மக்களிடம் இறங்கி வர முடியாமல், தலைவர்களையும் பிரமுகர்களையும் மதபீடங்களையும் மட்டும் சுற்ற முடிகிறது? எப்படி பிறருடைய நிகழ்ச்சி நிரலில் இயங்கக் கூடியதாக உள்ளது?

உண்மையான மக்கள் நேயம் (மனித நேயம்) என்பது என்ன? ‘தேசமாகச் சிந்தித்தல் என்று சொல்கிறீர்களே!’ அது இந்த மக்களை அடிப்படையாகக் கொண்டதுதானே?



அதாவது, தேசம் என்பது பிரதானமாக மக்களை உள்ளடக்கியது தானே? அந்த மக்களின் உளநிலையை அறிந்த மருத்துவர்களிடமும் மெய்யான சமூகச் செயற்பாட்டாளர்களிடத்திலும் உரையாடி அறிந்து பாருங்கள், உண்மை என்னவென்று தெரியும். யதார்த்த நிலை என்னவென்று புரியும்.

அதை அப்படியே ஒரு வர்ணமாகத் தீட்டிப் பாருங்கள். தேசம் இருண்டு போயிருக்கும். அந்தளவுக்குத் துயரும் அவலமும் நிரம்பிய பரப்பு அது. எளியதொரு (வலிய) உண்மை.

வடக்குக் கிழக்கில் சாப்பிடாமல் தினமும் பாடசாலைக்குச் செல்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அறிந்து பாருங்கள். உங்களுடைய பிள்ளை ஒரு வேளையாவது உண்ணாமல் பாடசாலைக்குச் சென்றதா? என்பதையும் ஒரு தடவை உங்கள் இதயத்தில் கை வைத்துச் சொல்லுங்கள்.

இப்படிப் பல விடயங்கள் உண்டு. இதையெல்லாம் ஒரு போதுமே இவர்கள் சிந்திக்கப்போவதில்லை. ஆனாலும் தேசமாகத் திரண்டால், அடுத்த கட்டம் என்ன என்ற கேள்வியை இந்தக் கட்டுரையில் எழுப்புவோம். இனியாவது பதில் சொல்கிறார்களா என்று பார்ப்போம். தவிர, தமிழ் மக்கள் தேசமாக - ஒன்றாகத் திரள்வதொன்றும் புதிய விசயமேயல்ல.

கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் மக்கள் அப்படித் தேசமாகத் திரண்டே உள்ளனர். தமிழரசுக் கட்சியை, பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணியை, பிறகு இயக்கங்களை, பிறகு விடுதலைப் புலிகளை, கூடவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, அது உடைந்து சிதறிய பிறகும் தமிழ்த் தேசியக் கட்சிகளை எல்லாம் தமிழ் மக்கள் ஆதரித்து நிற்பது தேசமாகத் திரண்ட (அந்த உணர்வின்) அடிப்படையில்தானே?

ஏன், 2010, 2015, 2020 ஆகிய ஆண்டுகளில் நடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதத்தையும் வாக்களித்த முறையையும் ஒரு தடவை படமாக வரைந்து பாருங்கள். தமிழீழ வரைபடம் அப்படியே தெரியும்.

அது தமிழ்த் தேசியக் கட்சிகளின் வேண்டுகோளுக்கு அமைய - தேசமாகத் திரண்டு வாக்களித்ததால் தானே வந்தது?

இந்த 60 ஆண்டுகளிலும் ஏற்படுத்தப்பட்ட மிகப் பெரிய நெருக்கடிகள், சவால்கள், உயிர் அச்சுறுத்தல்கள், இழப்புகள், அலைச்சல்களின் மத்தியிலும் தங்கள் விடுதலை வேட்கையையும் அரசியல் உணர்வையும் தமிழ் மக்கள் விட்டு விடவில்லை. (இதைப் புரிந்து கொள்ளக் கூடிய அறிவுக் கண்ணை இன்று சிலர் இழந்து விட்டனர் போலும்).

இவ்வாறு அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகத் தேசமாகத் திரண்டு நிற்கும் மக்களுக்கு கிடைத்தது என்ன? தமிழ்த் தலைமைகள் பெற்றுக் கொடுத்தது என்ன? இந்தக் கேள்வியை இந்தக் கட்டுரையாளரும் தனக்குள் பொறுப்பெடுத்துக் கொள்கிறார்.

இப்படித் திரண்டு நிற்கும் தமிழ் மக்களுடைய சமூக, அரசியல், பொருளாதார விடுதலையையும் மேம்பாட்டையும் (தேவைகளையும்) நிறைவேற்ற முடியாத போதுதான், மக்கள் இந்த அரசியலை விட்டு (தமிழ்த் தேசியத் தரப்பை விட்டு) விலகிச் செல்ல முற்படுகிறார்கள். இது ஆபத்தான ஒரு நிலையே.

ஆனால், இதைப் புரிந்து கொண்டு, நம்மைச் சுய விமர்சனத்துக்கு உட்படுத்தி, மாற்றங்களை நிகழ்த்தாத வரையில் மக்கள் மாறிச் செல்வதைக் கட்டுப்படுத்த முடியாது.

தங்களை வைத்து அல்லது தங்களை ஏமாற்றி இந்தத் தலைமைகளும் அவர்களுக்குத் தொண்டு செய்வோரும் அரசியற் பிழைப்பு நடத்துகின்றனர் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுகிறது. அது இவர்களின் மீது சலிப்பையும் ஏமாற்றத்தையும் அளிக்கிறது. கோபத்தை உண்டாக்குகிறது.

இதைச் சமாளித்துக் கொள்வதற்கு இன்னொரு பெரிய புரட்டைச் செய்ய முற்படுகின்றன தமிழ்த் தலைமைகள். நடக்கவே நடக்காத இன்னொரு பெரிய புலுடாவை விடுகின்றன.

ஆம், தமிழ் தலைமைகளும் அவர்களுக்குக் காவடி தூக்குகின்ற தமிழ் ஊடகர்களும் இப்படியான தோல்விச் சூழலில்தான் மக்களைத் திசை திருப்பும் புதிய தந்திரோபாயங்களைச் செய்கிறார்கள்.

இதற்கு ஒரு எளிய உதாரணத்தையும் வரலாற்று உண்மையையும் கூறலாம்.

1970 களில் தமிழரசுக் கட்சியின் 'வாய்ச் சவடால்' அரசியலுக்கு பெரிய தொய்வு ஏற்பட்டது. அதுவரையிலும் வீராவேசப் பேச்சுகளையும் பெரும் பிரகடனங்களையும் (பார்க்க - அன்றைய சுதந்திரன் பத்திரிகையை) செய்து வந்த தமிழரசுக் கட்சியினால் அடுத்த கட்டப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாமல் போனது (இப்போது தமிழ்த் தேசிய அரசியற் தரப்புகளின் மீது ஏற்பட்டிருப்பதைப் போன்ற நிலை அது).

தமிழரசுக் கட்சிக்கான மதிப்பு என்பது அது 1950, 60 களில் நடத்திய மக்கள் போராட்டங்களினாலும் மலையக மக்களுக்கான உரிமையைப் பற்றிப் பேசியதாலும் உருவானதுதான். பின்னாளில் அது அவ்வாறெல்லாம் செயற்படாமல் பிரமுகர் அரசியலுக்குள் தேங்கிவிட்டது).

இதனால் அதன் மீது மக்களுக்குச் சலிப்பும் நம்பிக்கையீனமும் ஏற்பட்டது. தமிழரசுக் கட்சியை விட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடும் கொம்யூனிஸ்ற் பாட்டியோடும் ஐக்கிய தேசியக் கட்சியோடும் மக்கள் சாயத் தொடங்கினர்.

அது அரசியல் ரீதியான தீர்வை எட்ட முடியாதென்று தெரிந்தாலும் தமது ஏனைய பிரச்சினைகள், தேவைகளாவது தீர்க்கப்படும் என்ற நிலையில் உருவாகியது. மக்களுக்கு இது தவிர்க்க முடியாததாக இருந்தது.

இதைத் திசைமாற்றுவதற்கே தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கமும் வட்டுக்கோட்டைத் தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டது. கூடவே தமது அரசியலுக்கு எதிராகச் சிந்திப்போரைத் துரோகிகளாகக் கட்டமைக்கவும் கூட்டணியினர் முற்பட்டனர்.



தமிழ் விடுதலைக் கூட்டணியை அப்பொழுது அதுவொரு புதிய உள்ளடக்கமாக - மாற்று ஏற்பாடாகத் தமிழரின் அரசியலில் நோக்கப்பட்டது. அதுவரையிலும் எதிரெதிராக நின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருவாகியது இந்தப் புதிய பார்வையைக் கொடுத்தது.

ஆனால், அடுத்து வந்த ஐந்து ஆண்டுகளில் அதனுடைய வரட்சியை - பிம்ப உடைவை - மக்கள் இனங்கண்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் அத்தனை பேச்சுகளும் பொய்த்துப் போயின. அரசியல் உள்ளடக்கமற்ற, செயலற்ற, நாடாளுமன்றக் கதிரைகளையும் பதவிச் சுகங்களையும் அடிப்படையாகக் கொண்ட அரசியற் போக்கின் தோல்வியாக அது அமைந்தது.

இதுதான் 2009 க்குப் பிறகு தமிழ் அரசியல் அரங்கிலும் நிகழத் தொடங்கி, இப்பொழுது உச்சக் கட்டத்துக்கு வந்துள்ளது. 2009 க்குப் பிறகான - போருக்குப் பிந்திய காலத்தைச் சரியாகக் கையாளத் தெரியாமல், தவறியதன் விளைவே இதுவாகும்.

2009 க்குப் பிறகான காலம் முற்றிலும் வேறு. அது தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் மிகமிகக் கடினமானதாகும். நினைத்துப் பார்க்கவே முடியாத பேரவலப் பரப்பு அது. போரின் தோல்வியை முழுதாகவே தலையிற் சுமந்து கொண்டிருந்த காலம் அது. இழப்பின் துயரமும் அடுத்து என்ன செய்வதென்று தெரியாத நிலையும், வாழ்வை மீளக் கட்டியெழுப்ப படுகின்ற பெரும்பாடுகளும் மக்களை அழுத்திக் கொண்டிருந்தன.

இதை விட பல்லாயிரக்கணக்கான போராளிகள் சிறையில் இருந்தனர். சிறையிலிருந்து (தடுப்பிலிருந்து) விடுவிக்கப்பட்டு வந்தவர்களுக்கும் அடுத்து என்ன என்ற கேள்வியே முன்னின்றது. அவர்களைக் கண்காணிக்கும் படைத்துறையும் புலனாய்வாளர்களும். மறுபக்கத்தில் காணாமலாக்கப்பட்டோர் விவகாரமும் தீராத் துக்கமாக நின்றது. மாற்றுத் திறனாளிகள் என்ன செய்வதென்று தெரியாதிருந்தனர் (இன்னும் அப்படித்தான் உள்ளனர்).

போதாக்குறைக்கு ஊர்கள் எல்லாம் இராணுவ மயமாகியிருந்தது. இந்தச் சூழலில் அடுத்த கட்ட அரசியல் எத்தகைய வடிவத்தை எடுப்பது, எவ்வாறான முன்னெடுப்பைச் செய்வது என்று தெரியாத தேக்கத்துக்கு உள்ளாகியிருந்தது. அதைப்பற்றிய ஆய்வுகளோ உரையாடல்களோ எதுவும் செய்யப்படவே இல்லை. இவ்வாறான சூழலைச் சந்தித்த உலக அனுபவங்கள் உள் வாங்கப்படவும் இல்லை. மேலும் மக்களுடைய இந்தப் பிரச்சினைகளுக்கு தமிழ்த்தரப்பின் உருப்படியான எந்த வேலைத் திட்டங்களும் களப்பணிகளும் ஆற்றப்படவே இல்லை.

இந்தப் பதினைந்து ஆண்டுகளில் எந்தக் கட்சியாவது ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் ஏதாவது திட்டங்களை உருவாக்கியதா? பணிகளைச் செய்ததா? இந்தக் கேள்விகளும் இங்கே பேசப்படும் விடயங்களும் யாரையும் குறை சொல்லுவதற்காகவோ குற்றம் சாட்டி நிராகரிப்பதற்காகவோ சொல்லப்படவில்லை.

இவற்றைக் குறித்து இப்போதாவது சிந்திக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நேச விமர்சனமாக - ஒரு திறந்த உரையாடலுக்கான முன் வைப்பாக இங்கே சுட்டப்படுகிறது.

எவரையும் நிராகரிப்புச் செய்வதன் மூலம் நம்மை - மக்களையே பலவீனப்படுத்த முடியும். மக்களைப் பலப்படுத்துவதாக இருந்தால் அனைத்துத் தரப்பும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும். கவனிக்கவும், செயற்பட வேண்டும் என்பதை.

இந்த நிலைமையைக் குறித்துச் சீரியஸாகக் கவனமெடுக்கப்பட வேண்டும் என்று ஒரு தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர். ஆனால், அந்தச் சுட்டுதல் - கவனப்படுத்தல் - புறக்கணித்து ஒதுக்கப்பட்டது. அவர்கள் வேறு எதிராளர்களாகவே நோக்கப்பட்டனர். இப்போது கூட இவ்வாறான போக்கே தொடர்கிறது. இது எவ்வளவு பெரிய அவலம்?

பதிலாக அத்தனை சுமைகள், தேவைகள், அவலங்களின் மத்தியிலும் மக்கள் அரசின் மீது கடுமையான கோபத்தையும் அதிருப்தியையும் கொண்டிருந்தனர். இதை (அரசின் மீதான எதிர்ப்புணர்வை) பயன்படுத்தி, அரசியல் அறுவடையைச் செய்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (அப்பொழுது அனைத்துத் தமிழ்த் தேசிய லேபிலாளர்களும் ஒன்றாகவே இருந்தனர்).

மக்கள் வழங்கிய பேராதரவையோ, மக்களின் அவல நிலையையோ அவர்களுடைய பிரச்சினைகளையோ புரிந்துகொண்டு,

> 2009 க்குப் பிறகான காலம் முற்றிலும் வேறு. அது தமிழ் மக்களுடைய வாழ்க்கையில் மிகமிகக் கடினமானதாகும். நினைத்துப் பார்க்கவே முடியாத பேரவலப் பரப்பு அது. போரின் தோல்வியை முழுதாகவே தலையிற் சுமந்து கொண்டிருந்த காலம் அது. இழப்பின் துயரமும் அடுத்து என்ன செய்வதென்று தெரியாத நிலையும், வாழ்வை மீளக் கட்டியெழுப்ப படுகின்ற பெரும்பாடுகளும் மக்களை அழுத்திக் கொண்டிருந்தன.



மக்களுக்கான அரசியலைச் செய்வதற்கு கூட்டமைப்பும் அதனோடு இசைந்து நின்ற தரப்புகளும் முன்வரவில்லை.

முக்கியமாகக் காலகாலமாகத் தமிழ்த் தலைமைகளின் அரசியல் விருப்புகளுக்கெல்லாம் தம்முடைய வாழ்க்கையையும் உயிரையும் உடல் உறுப்புகளையும் கொடுத்த மக்களுக்காக இவர்கள் தம்மை அர்ப்பணித்துப் பணி செய்யவேயில்லை. அவர்களுடைய பேரிடர்காலமாகிய அந்தக் காலச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களோடு ஒன்று கலந்து நிற்பதற்குப் பதிலாக, அரசு எதையும் செய்ய மறுதலிக்கிறது - தடுக்கிறது என்று சாட்டுப் போக்குகளைச் சொல்லித் தப்பித்துக் கொண்டனர்.

அரசு தடுத்தால், அதை எதிர்த்துப் போராடியிருக்க வேண்டும். அந்த நெருக்கடியை உடைத்தெறிந்திருக்க வேண்டும். அதுதானே போராட்ட அரசியல் - விடுதலைக்கான அரசியல்? பதிலாகப் 'பிரமுகர் அரசியல்' விளையாட்டில்தான் இவை ஈடுபட்டன. இதில் விடுதலை இயக்கங்களில் இருந்து வந்தவர்களும் (செயற்பாட்டு அரசியலில் உள்ளவர்களும்) பெருந்தவறை இழைத்தனர்.

பங்கேற்பு அரசியல் (Participation politics), பங்களிப்பு அரசியல் (Contribution politics) , அர்ப்பணிப்பு அரசியல் (Commitment politics) என்பதையெல்லாம் கைவிட்டு, பிரகடன அரசியலுக்கு (Declaratory politics) தாவிச் சென்றனர். பிரமுகர் அரசியல் - அதாவது பிரகடன அரசியல் (Declaratory politics) தானே வசதி? ஆனால், அதுவொரு அபாயமான சுருக்குக் கயிறு என்பதை இவர்கள் புரிந்து கொள்ளத் தவறினர்.

அந்தச் சுருக்குக் கயிறு இப்பொழுது இவர்களுடைய கழுத்தில் விழுந்துள்ளது. இதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் இந்த நிலையைத் திசை திருப்பவுமே 'பொதுவேட்பாளர்' என்ற 'அதிசயக் கிளியை' இப்பொழுது 'அலாவுதீனின் அற்புத விளக்காக'க் காட்ட முற்படுகின்றனர்.

இதற்குத்தான் ஐக்கியம், ஒருங்கிணைவு, தேசமாகத் திரள்வோம், சர்வதேசத்துக்கும் தென்னிலங்கைக்கும் எம்மை நிரூபிப்போம் என்ற 'சவடால்கள்' எல்லாம்.

இதனுடைய அரசியற் பெறுமானம், அடுத்த கட்ட அரசியல் என்ன என்று கேட்டால், 'இதொரு பரீட்சார்த்த முயற்சி. வெற்றி தோல்வி எல்லாம் சாதாரணம், இதை விட சிங்கள வேட்பாளருக்கு வாக்களித்து என்ன பயனைக் காண்பீர்கள்? எந்த அடிப்படையில் - எந்த நம்பிக்கையில் அவர்களுக்கு வாக்களிப்பது?' என்றெல்லாம் வினோதமாகக் கேட்கிறார்கள்.

போராட்ட அரசியலில் தம்மை அர்ப்பணித்து, இழப்புகளைச் சந்தித்து நிற்கும் மக்களை, மேலும் விசப்பரீட்சைக்கு உட்படுத்த முயற்சிக்கும் குரல் மனநிலையை எப்படி அனுமதிக்க முடியும்? இது கடந்த காலத்தில் இவர்கள் இழைத்த தவறையும் விட மோசமானதாகும்.

பழகிய, பழைய அரசியற் சிந்தனையில் இப்படித்தான் இவர்களால் சிந்திக்க தோன்றும். மாற்றுச் சிந்தனையில் கேள்விகள் எழும். போருக்கு முந்திய - போர்க்கால அரசியல் மனநிலையைக் கொண்டிருந்தால் இப்படித்தான் கேட்கவும் தோன்றும்.

போருக்குப் பிந்திய - புத்தாக்க அரசியலுக்கான - நிலைமாறு காலகட்ட அரசியற் சிந்தனையில் நாம் புதிய தந்திரோபயங்களைக் குறித்துச் சிந்தித்தால், இந்தக் கேள்விகள் முட்டாள்தனமானவை என்றே விளங்கும். அதற்குச் செல்லாதவரையில் பழைய குப்பைக்குள் பொன்முட்டையைத் தேடுவதாகத்தான் இருக்கும்.

இன்னும் எத்தனை காலம்தான் ஏமாறுவார், ஏமாற்றுவார்? என்ற பாடல்தான் இந்த வரிகளை எழுதும்போது நினைவில் வருகிறது.

ஏனென்றால், ஒரு பக்கம் தீவிரவாதப் படுத்தப்பட்டுள்ள இனவாத அரசின் தீராத ஒடுக்குமுறை. மறுபக்கம் நம்முடைய தலைமைகளே நம்மைப் பலியிடும் அவலம். இரண்டு அபாய நெருக்குவாரங்களின் மத்தியில்தான் தமிழ் மக்களுடைய விடுதலை அரசியலை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

> தமிழ் விடுதலைக் கூட்டணியை அப்பொழுது அதுவொரு புதிய உள்ளடக்கமாக - மாற்று ஏற்பாடாகத் தமிழரின் அரசியலில் நோக்கப்பட்டது. அதுவரையிலும் எதிரெதிராக நின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருவாகியது இந்தப் புதிய பார்வையைக் கொடுத்தது.



சிவகரன்

# கேள்விக்குறியாகும் மன்னாரின் எதிர்காலம்

" வாழ ஒரு சதுர அடி நிலம் கூட இனி இல்லை "

மனித வாழ்க்கைக்கு இயற்கை மிக அவசியம். ஒரு நாட்டில் முப்பது வீதத்திற்கு மேல் காடாக இருக்க வேண்டும் என்பதே நியதி. மனிதன் சுகதேகியாக வாழ்வதற்கும், விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் இருப்புக்கும் காடுகள் அவசியமானவை.

அத்துடன் கரியமில வாயுவை உட்கொள்வதற்கும், மழை வீழ்ச்சிக்கும் காரணமாவதுடன் மண்ணரிப்பையும், வெள்ளப்பெருக்கையும் காடுகளே தடுக்கின்றன.

இதில் ஆற்றல் சுற்றோட்டம், உணவு வட்டம், இயற்பியல், மற்றும் வேதியியல் சார்ந்த செயல்பாடுகளும் உள்ளடங்கும்.

காடுகளில் சதுப்பு நிலக் காடுகள், பசுமைக் மரக்காடுகள், இலையுதிர் காடுகள், ஊசி இலைக் காடுகள் எனப் பலவகை உண்டு. நிலவியல் மற்றும் வனவியல் இருப்புக்கு உட்பட்டவனே மனிதனும்.



உயிர்களின் வளர்ச்சிக்கு தேவையான எல்லாவற்றையும் இயற்கை தருகிறது. காடுகள், நுண்ணுயிரிகள், ஆறுகள், ஏரிகள், கடற்பகுதிகள், மலைகள், மண்வளம், மேகங்கள், மழைத்துளி இவை இயற்கையின் கொடையே.

இதில் தூய இயற்கைவாதம், தத்துவ இயற்கை வாதம், இயற்கைக்கு எதிரானது என மூன்று நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளது.

எனவே இந்த உயிரியல் பன்முகத் தன்மையை பாதுகாக்க வேண்டியது எங்கள் கடப்பாடாகும். ஆனால் அதை மன்னாரில் மட்டும் முழுமையாக நடைமுறைப்படுத்த முனைவது வேடிக்கையாகும்.

மன்னார் மாவட்டம் 2002.05 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பை கொண்டது. ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளையும், வடக்கிலே அதிக கனிய வளத்தையும் கொண்ட மாவட்டமாகும்.

ஏழு ஆறுகள், கட்டுக்கரைக் குளம் உட்பட மூன்று மத்திய நீர்ப்பாசன குளங்களும், ஏழு மாகாண நீர்ப்பாசன குளங்களும் 448 கமநலசேவைத் திணைக்களத்துக்கு உட்பட்ட குளங்களும், 186 ஊட்டல் குளங்களும் அங்கு காணப்படுகின்றன.

இலங்கையிலே அதிக நெல் விளைச்சலைத் தருவதில் மன்னார் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மிக அழகிய கடல் வளத்தையும் தன்னகத்தே கொண்டது மன்னார் மாவட்டம்.

ஒரு காலத்தில் முத்துக் குளிப்பதற்கு பெயர் பெற்ற இடமாகவும் விளங்கியது. இலங்கையிலே கருவாட்டு உற்பத்தியிலும் சிறந்து விளங்கியது. பனை வளமும் அதிகம் காணப்படுகிறது.

அத்துடன் ஒல்லாந்தர் கோட்டை, அல்லிராணி கோட்டை, தென்னாசியாவில் ஆகப்பெரிய சுற்றளவு உள்ள பெருக்க மரம், வெளிச்ச வீடு, தொங்கு பாலம், நாற்பது அடி கல்லறை, திருக்கேதீஸ்வரத் திருத்தலம், மடுத் தேவாலயம் போன்ற சுற்றுலா தளங்களும் காணப்படுகின்றன.

இந்திய போக்குவரவுக்கும் மிகக் கிட்டிய தூரத்தில் உள்ள மாவட்டமும் மன்னார் ஆகும். இந்த மாவட்டத்தின் பிரதான தொழில் விவசாயம், மீன்பிடி.

ஆனால் தற்பொழுது இரண்டும் சவாலுக்கு உட்பட்ட நிலையில் உள்ளன. யுத்தம் முடிவுற்ற பின்னர் அரசாங்கம் தமது திணைக்களங்கள் ஊடாக மன்னாரைத் தனது பிடிக்குள் அகப்படுத்தி விட்டது.

எதிர்காலத்தில் மனிதன் குடியேற முடியாத அளவில் சட்டக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஒரு அங்குல நிலம் கூட அரச பயன்பாட்டு நிலமாக இல்லை.

வனத் திணைக்களமும், வன விலங்குகள் திணைக்களமும் எந்த விதமான கட்டுப்பாடுமின்றி, மாவட்ட அதிகாரிகளின் ஆலோசனையுமின்றி, எந்த வித ஒழுங்கு முறைமையும் பின்பற்றப்படாமல் நிலப்பரப்புகளைத் தான் தோன்றித்தனமாக கையகப்படுத்தி அரச வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தியுள்ளன.

அவற்றில் கூட தெளிவான வரைபடமோ எல்லைகளோ கோடி காட்டப்படவில்லை. இடப்பெயர்ந்தவர்கள் மீள்குடியமர்வதற்கு முன்னர் அந்த நிலங்களை அரச திணைக்களங்கள் தமக்குச் சாதகமாக மாற்றி விட்டன.

இது ஒரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பாகும். மன்னார் மாவட்டத்தில் மீள்குடியேற வேண்டிய நான்காயிரம் குடும்பங்களுக்கு மேல் இந்தியாவில் வசிக்கின்றனர்.

இவர்கள் வரும்போது எங்கே குடியேறுவது? மன்னார் மக்கள் எதிர்காலத்தில் பிள்ளைகள் பெறுவதை நிறுத்த வேண்டும். அல்லது வேறு மாவட்டத்திற்கு குடிபெயர வேண்டும்.

இந்த நெருக்கடிகளுக்குள்ளே காற்றாலை மின் உற்பத்திக்கு காணி சுவீகரிப்பு, கனிய மண் அகழ்வுக்கு காணி சுவீகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் இடைவிடாத தொல்லைகள் என மக்களை மேலும் மேலும் அச்சுறுத்தலுக்கும், வாழ்வாதார இழப்புக்கும், வாழ்வியல் அசௌகரியத்துக்கும் உள்ளாக்குவது பெரும் தவறாகும்.

தமது மாவட்டத்திலேயே, தனது மண்ணிலேயே, தாம் எந்தவித உரித்தும் இல்லாதவர்களாக, வாடகை வீட்டில் வசிப்பவர்கள் போன்ற அச்சவுணர்வோடு வாழுகின்ற மனோநிலையை மன்னார் மக்களுக்கு அரசாங்கம் திட்டமிட்டு ஏற்படுத்தியிருக்கிறது.

இயற்கையும், கடல் வளமும் அவசியம்.

> **மன்னார் மக்கள் மூன்று தசாப்தத்திற்கும் மேலாக அறிவுபூர்வமாக பிரதிபலிக்கும் அரசியல் தெரிவுகளை மேற்கொள்ளாமல் மதவாத சகதிக்குள் சிக்குண்டு உணர்வடிமைகளாக இருப்பதனால் மன்னாரின் எதிர்காலம் எப்படி இருக்க போகிறது? எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை. இப்போது கேள்வியெல்லாம், இந்த மாவட்டத்தை காப்பாற்ற போவது யார்...?**








அதில் எவருக்கும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனாலும் மனிதன் உயிர்வாழ முடியாத போது இயற்கை மட்டும் இருந்து எதற்கு பயன்பட போகிறது எனும் கேள்வி எழுகிறது.

அரசு சட்டத்தை மட்டுமே நடைமுறைப் படுத்துகிறதே தவிர. மனிதாபிமானத்தையோ, மனித வாழ்வியலின் இருப்பையோ ஒரு போதும் கவனிப்பதில்லை.

மன்னார் மாவட்டம் ஒரு லட்சத்து 99 ஆயிரத்து 600 ஹெக்டேயர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். இதில் கடல், தரை உட்பட வனத் திணைக்களம், வன விலங்குகள் திணைக்களம் சேர்ந்து 2,21,220 ஹெக்டேயர் நிலத்தை வர்த்தமானி மூலம் காலத்துக்கு காலம் பிரகடனப்படுத்தி கையகப்படுத்தியுள்ளன.

**வனத் திணைக்களத்தினால் வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட விவரம்:-**

நிந்தாவில் 2,0287.66 ஹெக்டேயர், முள்ளிக்குளம் 5,283.77 ஹெக்டேயர், பாலம்பிட்டி 3,498.89 ஹெக்டேயர், மடு 18,026.77 ஹெக்டேயர், மாவில்லு 40,030.62 ஹெக்டேயர், மடு 26,749.32 ஹெக்டேயர், பலகமுனை 300.2 ஹெக்டேயர், அச்சங்குளம் கண்டல் காடு 1,405.8 ஹெக்டேயர், விடத்தீவு கண்டல் காடு 501.92 ஹெக்டேயர், எருக்கலம்பிட்டி கண்டல் காடு 116.2.8 ஹெக்டேயர், மூன்றாம் பிட்டி கண்டல் காடு 517.4.2 ஹெக்டேயர், திருக்கேதீஸ்வரம் கண்டல் காடு 328.01 ஹெக்டேயர்.

**வனவிலங்குகள் தினணக்களத்தினால் வர்த்தமானி மூலம் அத்தாட்சி படுத்தப்பட்ட நிலங்களின் விவரம்:-**

மடு தேசிய பூங்கா 63,067 ஹெக்டேயர், ஆதாம் பாலம் கடல் தேசிய பூங்கா 18,990 ஹெக்டேயர், வங்காலை பறவைகள் சரணாலயம் 4,838.9 ஹெக்டேயர், கட்டுக்கரைக் குளம் பறவைகள் சரணாலயம் 3941.2.3 ஹெக்டேயர், விடத்தில்தீவு இயற்கை காப்பகம் 2,90,280 ஹெக்டேயர், இதில் 05.06.2024 வர்த்தமானியின் பிரகாரம் 160 ஹெக்டேயர், விடுவிக்கப்பட்டாலும் அதன் வர்த்தமானி பிரசுரத்தில் விவரம் தெளிவாக இல்லை.

முழுமையாக விடுவிக்கப்பட்டதா அல்லது 160 ஹெக்டேயர் மட்டும் விடுவிக்கப்பட்டதா என்பது எவருக்கும் புரியவில்லை.

வில்பத்து மிருகங்கள் வசிப்பிடம் 617 ஹெக்டேயர்.

இதில் பலகமுனை, விடத்தில்தீவு, எருக்கலம்பிட்டி, மூன்றாம்பிட்டி, திருக்கேதீஸ்வரம், மடுத் தேசியப்பூங்கா ஆகியனவற்றிற்கு வனத் திணைக்களமும், வன விலங்குகள் திணைக்களமும் இணைந்து வர்த்தமானி வெளியிட்டுள்ளன.

மொத்தம் 64,880.83 ஹெக்டேயர். இதில் காணி விடுவிப்பிற்காக மன்னார் மாவட்ட செயலகத்தால் வனத் திணைக்களத்திடம் 13,020.1 ஹெக்டேயர் கோரப்பட்டுள்ளது.

ஆனால் விடுவிக்கப்பட்டது வெறுமனே 1,513.3.1 ஹெக்டேயர். இவை ஏலவே பயன்பாட்டில் உள்ள நிலமாகும். புதிதாக காணி எதுவும் விடுவிக்கப் படவில்லை. இதே வேளை 12,801.72 ஹெக்டையரை புதிதாக காடு வளர்ப்பதற்காக வனத் திணைக்களம் கோருகிறது.

அத்துடன் 1,218.44 ஹெக்டேயரை கிராமத்திற்கான காடு வளர்ப்பிற்கும் கோரியுள்ளது. வடிவேலுவின் 'கிணத்தை காணவில்லை' என்பது போல் மன்னாரில் 'காணியை காணவில்லை' என தேடும் நிலையையே இந்த புள்ளி விவரங்கள் சுட்டி நிற்கின்றன.

மாவட்டத்தில் மக்கள் பயன்பாட்டில் உள்ள நிலம், ஏறக்குறைய 20 வீதம் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த புள்ளி விவரங்களின் படி மாவட்டத்தில் இனி ஒரு சதுர அடி நிலம் கூட மக்கள் குடியமர்வதற்கு வாய்ப்பில்லை.

இருக்கும் நிலத்தில் மாடி வீடுகள் அமைப்பதைத் தவிர வேறு வழியுமில்லை. எதிர்காலத்

> காற்றாலை மின் உற்பத்திக்கு காணி சுவீகரிப்பு, கனிய மண் அகழ்வுக்கு காணி சுவீகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தின் இடைவிடாத தொல்லைகள் என மக்களை மேலும் மேலும் அச்சுறுத்தலுக்கும், வாழ்வாதார இழப்புக்கும், வாழ்வியல் அசௌகரியத்துக்கும் உள்ளாக்குவது பெரும் தவறாகும்.



தில் மிகப்பெரிய சவாலை மன்னார் மாவட்ட மக்கள் எதிர் நோக்கப் போகிறார்கள்.

கடல் பகுதிகளும் கூட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதால் எதிர்காலத்தில் கடலில் மீன் பிடிப்பதற்கும் தடை விதித்தாலும் ஆச்சரியத்துக்கு இடமில்லை.

இந்த ஆண்டு நாட்டில் உணவு உற்பத்தி வெறும் 54% மட்டுமே.

இவ்வாறு அரசாங்கம் மக்களுக்கு நில ரீதியாக நெருக்கடி கொடுத்தால் நாட்டில் எப்படி விவசாய செய்கை மேம்படுத்தப்பட்டு உணவு உற்பத்தி அதிகரிக்கும்? வறுமை தாண்டவம் ஆடுவதை தவிர வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே இதனால் மன்னாரின் அபிவிருத்தி முழுமையாக தடைப்படுகின்றது. 83 குளங்கள் வனத் திணைக்களத்தாலும், 26 குளங்கள் வனவிலங்குகள் திணைக்களத்தாலும், 33 குளங்கள் இரண்டு திணைக்களங்களாலும் கையகப் படுத்தப்பட்டுள்ளதாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

இதற்குள் எந்த விதமான அபிவிருத்தி செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அதனால் அக் குளங்களின் கீழ் உள்ள விவசாயம் முழுமையாக பாதிக்கப்படுகிறது.

மன்னார் மக்களுக்கான இயற்கை வள குடிதண்ணீருக்காக அடையாளப் படுத்தப்பட்ட கல்லாறு குடிதண்ணீர்த் திட்டம், பள்ளி முனை கடல் ஆழப்படுத்துதல், இலவங்குளம் பாதை திறப்பு, மேய்ச்சல் தரவை ஒதுக்கீடு, நீதிமன்ற வளாகம் இடமாற்றம், கூராய் வெள்ளாங்குளம் வீதி புனரமைப்பு, பரப்புக்கடந்தான் பெரியமடு வீதி புனரமைப்பு போன்றவை எல்லாம் இந்த அரச திணைக்களங்களின் தான்தோன்றித் தனமான காணி ஆக்கிரமிப்பினால் தடைப் பட்டுப் போயுள்ளன.

இது மட்டுமன்றி கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் இன்மையால் கால்நடைகளைப் பண்ணையாளர்கள் விற்கும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் எதிர்காலத்தில் எந்த அபிவிருத்தியும் செய்வதற்கு உரிய நிலச் சூழல் அமைப்பு இல்லை. இந்த விடயத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொண்டவர்களாகத் தெரியவில்லை.

சாமானிய மக்களுக்கு இதனால் ஏற்படுகின்ற விளைவுகள், சவால்கள் குறித்தும் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற தாக்கங்கள் பற்றியும் எந்த விதமான புரிதலும் இல்லை.

ஆகவே மன்னார் மண்ணின் எதிர்காலம் கேள்விக்குறியே. அறிவற்ற உணர்ச்சி அரசியல் எதைச் சாதித்தது?

மன்னார் மக்கள் மூன்று தசாப்தத்திற்கும் மேலாக அறிவுபூர்வமாக பிரதிபலிக்கும் அரசியல் தெரிவுகளை மேற்கொள்ளாமல் மதவாத சகதிக்குள் சிக்குண்டு உணர்வடிமைகளாக இருப்பதனால் மன்னாரின் எதிர்காலம் எப்படி இருக்க போகிறது? எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை. இப்போது கேள்வியெல்லாம், இந்த மாவட்டத்தை காப்பாற்ற போவது யார்...?

**மன்னார் மாவட்டத்தில் எதிர்காலத்தில் எந்த அபிவிருத்தியும் செய்வதற்கு உரிய நிலச் சூழல் அமைப்பு இல்லை. இந்த விடயத்தை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொண்டவர்களாகத் தெரியவில்லை. சாமானிய மக்களுக்கு இதனால் ஏற்படுகின்ற விளைவுகள், சவால்கள் குறித்தும் எதிர்காலத்தில் ஏற்படப் போகின்ற தாக்கங்கள் பற்றியும் எந்த விதமான புரிதலும் இல்லை.**



ஐங்கரன்




# சர்வதேச நீதிமன்றால் இஸ்ரேல் பிரதமருக்கு பிடியாணை

**போர்** குற்றம், தீவிரவாதம், ஆக்கிரமிப்பு உள்ளிட்ட விவகாரங்களை விசாரித்து வரும் இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், 1990 களில் உருவானது.

### சர்வதேச நீதிமன்றமும் இனப் படுகொலையும்:

இதில் உறுப்பினராக இருக்கும் நாடுகளுக்கு மட்டுமே, அந்த நீதிமன்றத்தின் உத்தரவுகள் பொருந்தும். சில ஆண்டுக்கு முன்னர், இந்த நீதிமன்றம், டொனால்ட் ட்ரம்பிற்கு எதிராக ஒரு உத்தரவை பிறப்பித்தது. இதனையடுத்து, உடனே அமெரிக்கா அந்த நீதிமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகியது.



அதேபோல், அந்த நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் யாரும் அமெரிக்காவிற்கு வரக்கூடாது என்றும் கூறியது. இதனையடுத்து, இஸ்ரேல் பிரதமர் மீதான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இந்த முடிவை அமெரிக்காவால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்பதாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது.

ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாகக் கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப் படுகொலையாகப் பார்க்கப் படுகிறது.

இனப்படுகொலை ஒரு சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும்




> **போர்க்குற்ற விசாரணைக்கு இஸ்ரேல் உடன்படுமா?**




ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப்படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

## நெதன்யாகு கைது?

அமெரிக்கா தனது நட்பு நடான இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கைது செய்ய சர்வ



தேச நீதிமன்றத்தினால் (International Court of Justice) பிடியாணை பிறப்பிக்கப்பட இருப்பது தொடர்பில் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு(Benjamin Netanyahu) போர் குற்றத்தின் காரணமாக விரைவில் கைது செய்யப்படுவார் என்றும் இதனை அமெரிக்கா தடுக்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளது.

அத்தோடு, பாலஸ்தீனம் உடனான போரில் அதிகமான சட்டவிதி மீறல்கள் இடம் பெற்றுள்ளதாகவும், இவ்வாறானதொரு போருக்கே அவசியம் இல்லை என்றும் சர்வதேச நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில், இஸ்ரேல்-ஹமாஸ் போரில் 34,000 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். அதில், பெண்களும், குழந்தைகளுமே அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

## வீட்டோவும் அமெரிக்காவும்:

போர் நிறுத்தத்தை கோரி ஐநா பாதுகாப்பு கவுன்சிலில்(United Nations Security Council, UNSC) பாலஸ்தீன ஆதரவு நாடுகள் கொண்டுவரும் தீர்மானங்களை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ரத்து செய்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில், தனது நட்பு நாடான இஸ்ரேலின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை கைது செய்ய சர்வதேச நீதிமன்றத்தினால் (International Court of Justice) பிடியாணை பிறப்பிக்கப்படவிருப்பது தொடர்பில் அமெரிக்கா எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலில் தொடரும் இனப்படுகொலை குற்றச்சாட்டுக்கு போதுமான ஆதாரங்கள் இருப்பதாகவும் எனவே இதனை சர்வதேச நீதிமன்றம் போர்க்குற்றம் பற்றி விசாரிக்க முடியும் என திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

ஆயினும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையை நிறுத்த வேண்டும் எனவும், போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் எனவும் தென்ஆப்பிரிக்கா விடுத்த கோரிக்கை குறித்து




சர்வதேச நீதிமன்ற நீதிபதிகள் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில், இனப்படுகொலை குற்றச்சாட்டு தவறானது என தெரிவித்துள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தங்களது தரப்பு நியாயத்தை ஏற்க மறுத்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளார்.

## ஐநா பணியாளர்கள் கொலை:

காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. சில வாரங்களுக்கு முன்னர் ஐநா பணியாளர்களை ஏற்றிச் சென்ற வாகனம் மீது இஸ்ரேல், வான்வழி தாக்குதல் நடத்தியதில் ஏழு பேர் கொல்லப்பட்டனர். எனவே, உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று உலக நாடுகள் தீவிரமாக வலியுறுத்தத் தொடங்கின.

இது நாள் வரை இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்ற அமெரிக்கா கூட, உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டது.

ஆனால், இஸ்ரேல் அதனை நிராகரித்து வந்ததது. இதுவரை போரில் 34 ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், காசாவுக்கு நிவாரண பொருட்கள் எதுவும் தராததால், குடிநீர் பஞ்சம், உணவுப் பஞ்சம் என அனைத்தும் தலை தூக்கி நிற்கின்றன. இதனால் தொற்று நோய்ப் பாதிப்புகள் ஏற்பட்டு ஏராளமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதற்கிடையில், போர் நிறுத்தம் கோரி ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் பாலஸ்தீன ஆதரவு நாடுகள் கொண்டு வரும் தீர்மானங்களை, அமெரிக்காவும், பிரிட்டனும் தனது 'வீட்டோ' அதிகாரத்தை பயன்படுத்தி ரத்து செய்து வருகின்றன.



# பயணம்



பாதை அறியா பயணம்
தொடக்கமும் முடிவும்
அனைவருக்கும்
ஒன்றுதான்.
ஆனால்,
பயணங்கள்
வெவ்வேறானவை.

அதை அழகாக்குவது
நம் கையில்.!

நாம் முடிவை நோக்கி
பயணிக்கிறோம்.
ஆனால்,
முடிவுக்காக அல்ல
கோவங்களை குறைத்து
சிரித்துப் பழகுவோம்.

நட்புக்களுடன் இணைவோம்.
பக்கத்தில் இருப்பவர்களிடம்
பண்பாய் நடப்போம்
அறிவை வளர்ப்போம்
ஆன்மீகத்தில் பயணிப்போம்.
கடைசியில்.
இறப்பு தான் முடிவு!
என்றாலும்.
அதுவும்
மற்றும் ஒரு பயணத்தின்
தொடக்கமே!!

அன்புடன் முல்லை பாஸ்கர்

## கதிர்காம புனித பாதயாத்திரை



# காட்டுப் பாதையை பாதுகாப்போம்



இலங்கையில் இந்துக்கள் ஆண்டுதோறும் மேற்கொள்ளும் கதிர்காமத்திற்கான புனித பாதயாத்திரை இலங்கையில் உள்ள ஒரே ஒரு பழமை வாய்ந்த பாத யாத்திரையாகும். இது இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரம்பரியத்தைக் கொண்டதாகும். இலங்கையின் வடக்கில் உள்ள செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் இருந்து கிழக்குக் கரை ஓரமாக தெற்கில் உள்ள கதிர்காமம் முருகன் கோயில் வரை இப்புனித பாதயாத்திரை மேற்கொள்ளப் படுகிறது.

**கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம்**
**வரலாற்று ஆய்வாளர், ஒருங்கிணைப்பாளர்**
**(இலங்கை யாத்திரை சபை)**



## முருகனும் வீரபாகுத் தேவரும் பயணம் செய்த பாதை :-

முருகனும், வீரபாகுத் தேவரும் இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள உகந்தைக் கடற்கரையில் வந்திறங்கி, அங்கிருந்து காட்டின் ஊடாக பயணம் செய்து கதிரமலையை அடைந்து, அங்கு பாடிவீடு அமைத்து அங்கிருந்து சூரனை வதம் செய்ததாக ஐதீகமாகக் கூறப்படுகிறது.

அவ்வாறு முருகனின் பாதம் பட்ட இப்பாதையூடாக, அவனின் அடியொற்றி, இந்தியாவில் இருந்து சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் கதிர்காமத்துக்கு வந்து முருகப் பெருமானைத் தரிசித்து சென்றுள்ளனர். இலங்கையில் இருந்தும் சித்தர்கள், யோகிகள் பலர் பாதயாத்திரை மேற்கொண்டு முருகனை வணங்கிச் சென்றுள்ளனர்.

## 30,000 யாத்திரீகர்கள் பயணம் செய்யும் புனித பாதயாத்திரை :-

இப்புனித பாத யாத்திரையில் இலங்கையில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து சுமார் 30,000 பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். எனினும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இருந்தே அதிகளவான யாத்திரீகர்கள் பாத யாத்திரையாக வருகின்றனர். இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து 80 சதவீத பக்தர்கள் புனித யாத்திரை வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாத்திரீகர்கள் நடந்து செல்லும் காட்டுப்பாதை பண்டைய காலத்தில் கிழக்குக் கரையோரத்தில் உள்ள பெரும் காடுகளையும், சிறு சிறு பட்டினங்களையும் ஊடறுத்து கதிர்காமம் வரை சென்றுள்ளது. இப் பாதயாத்திரை ஊடறுத்துச் செல்லும் காடுகளில், இலங்கையின் தென்கிழக்கில் உள்ள அடர்ந்த காடு ஆங்கிலேயர் காலத்தில் 1900 ஆம் ஆண்டு வன விலங்குகள் சரணாலயமாகவும், 1938 ஆம் ஆண்டு முதல் தேசிய பூங்காக்களாகவும் பிரகடனப்படுத்தப்பட்டன.

காட்டின் கிழக்குப்பகுதி குமண பறவைகள் சரணாலயமாகவும், ஏனைய பகுதி யால வனவிலங்குகள் சரணாலயமாகவும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

## கந்தசுவாமிக் கடவுளின் புனிதவனம் :-

இக்காடுகள் ஊடாக மேற் கொள்ளப்படும் கதிர்காமத்திற்கான புனித பாதயாத்திரை இலங்கை மக்களின் குறிப்பாக இந்துக்களின் மிகப் பெரிய பாரம்பரிய சொத்தாகும். அது போல முருகப் பெருமான் பயணம் செய்த, அவரின் காலடிபட்ட, அகத்திய முனிவர் முதல் யோகர் சுவாமிகள் வரை நடந்து சென்ற காட்டுப் பாதையும் எமது பாரம்பரிய சொத்தாகும்.

இக்காட்டை சிங்கள மொழியில் 'கத்தரகம தெவியன்கே அடவிய' என அழைக்கின்றனர். தமிழில் 'கந்தசுவாமிக் கடவுளின் புனித வனம்' என அழைக்கப்படுகிறது.

இக்காட்டில் பல்வேறு வகையான உலர் வலய மரங்களும், அரிய வகையான பல மூலிகைச் செடிகளும் வளர்கின்றன. 45 வகையான மிருகங்களும், 255 வகையான பறவை இனங்களும், ஆயிரக்கணக்கான பூச்சி வகைகளும் இங்கு வாழ்கின்றன.

இக்காட்டினூடாக நாம் மேற் கொள்ளும் பாத யாத்திரையைப் பேணிப் பாதுகாப்பது போல, இப்பாத யாத்திரை நிகழும். பல்லாயிரக் கணக்கான உயிரினங்கள் மற்றும் மூலிகைகள் நிறைந்த இக்காட்டையும் பேணிப் பாதுகாப்பது எமது தார்மீகக் கடமையாகும்.

உண்மையில் இந்தக் காடு நமக்கு சொந்தமானதல்ல. இக் காட்டையே நம்பி வாழும் மிருகங்கள், பறவைகள் மற்றும் உயிரினங்களுக்கே சொந்தமானது. எனவே அவ் உயிரினங்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் நாம் இந்தக் காட்டைப் பயன்படுத்த வேண்டும்.





### பாத யாத்திரீகர்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் :-

எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் உகந்தை முதல் வீரச் சோலை வரை உள்ள குமண, யால மற்றும் கட்டகாமம் காட்டில் நடந்து செல்லும் பாத யாத்திரீகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய விடயங்கள் பல உள்ளன. அவையாவன,

1) பொலிதீன் பைகள் மற்றும் சொப்பிங் பேக் ஆகியவற்றை காட்டுக்குள் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும். முடியுமான வரை துணியினால் செய்யப்பட்ட பைகளைப் பயன்படுத்த வேண்டும்.

2) தவிர்க்க முடியாத காரணத்தினால் பொலித்தீன் பைகள் மற்றும் பிஸ்கட் பாக்கெட்டுக்கள் ஆகிவற்றைக் கொண்டு சென்றால் அவற்றின் வெற்றுப் பைகளை காட்டில் கண்ட இடங்களில் வீசாமல் உங்கள் பைகளில் வைத்துக் கொண்டு போய் குப்பைத் தொட்டிகள் உள்ள இடத்தில் போட வேண்டும்.

3) நீங்கள் கொண்டு செல்லும் பால்மா, சீனி, தேயிலை ஆகியவற்றை ஒரு சிறிய பிளாஸ்டிக் டப்பாவில் போட்டு எடுத்துக் கொண்டுவந்து பயன்படுத்துவது சாலச் சிறந்தது. இப்படிச் செய்வதால் சொப்பிங் பேக் பாவனை இன்னும் குறைவடைகிறது.

நீங்கள் வீசும் பொலித்தீன் பைகளில் உள்ள எஞ்சிய உணவுப் பொருட்களை உண்ணும் மான், முயல் போன்ற சிறிய விலங்குகள் பொலித்தீன் பைகளுடன் அவற்றை உண்டு உயிர் விடுகின்றன.

4) ஒருவர் இரண்டு குடிநீர் போத்தல்களை மட்டுமே கொண்டு செல்வது நல்லது. அவற்றில் நீர் தீர்ந்துவிட்டால், காட்டுப்பாதை வழியில் உள்ள பிளாஸ்டிக் நீர்த் தொட்டிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு அமைப்புகளின் பவுசர் வண்டிகள் ஆகியவற்றில் இருந்து நீரை நிரப்பிக் கொள்ள வேண்டும்.

5) நீங்கள் கொண்டு செல்லும் ஜூஸ் போத்தல்களில் உள்ள ஜூசை குடித்த பின் வெற்றுப் போத்தல்களை கண்ட இடத்தில் வீச வேண்டாம். அவற்றை உங்கள் பைகளில் வைத்து எடுத்து வந்து குப்பைத் தொட்டிகளில் போட வேண்டும்.

நீங்கள் வீசும் வெற்றுப் பிளாஸ்டிக் போத்தல்கள் காட்டுச் சூழலை மாசடையச் செய்கின்றன. காட்டின் அழகையும், வனப்பையும் கெடுக்கின்றன.

6) காட்டில் தேநீர் சுடவைத்துக் குடிக்கவும், உணவு சமைக்கவும், இரவில் மிருகங்களிடம் இருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் தீ மூட்டுபவர்கள் தமது வேலை முடிந்தவுடன் அந்தத் தீயை முற்றாக அணைத்து விட்டுச் செல்ல வேண்டும்.

காட்டில் தீ மூட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் தப்பித் தவறி காட்டில் தீ பிடித்து பரவினால் பசுமையான காட்டின் பெரும்பகுதி கருகி அழிந்து விடும். காடுகள் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அந்தளவுக்கு மழை அதிகம் கிடைக்கும்.

7) தற்காலிக கூடாரங்கள் அமைக்க காட்டில் மரங்களை வெட்டுவதும், பழங்களைப் பறிக்க கிளைகளை முறிப்பதும் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். இதுவும் தடை செய்யப்பட்ட நடவடிக்கையாகும்.

8) காட்டில் மது பாவனை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ள விடயங்களை நாம் சரியாகக் கடைப் பிடிப்போமானால் நமது பாதயாத்திரை எதிர்காலத்தில் எந்தவிதமான இடையூறும் இன்றி சிறப்பாக நடைபெற்று வரும்.

இலங்கையில் உள்ள பாதயாத்திரை சங்கங்கள் மற்றும் குழுக்கள் வருடாவருடம் பக்தர்களை பாத யாத்திரையாக அழைத்துச் சென்று, முருகப் பெருமானின் தரிசனம் காணச்செய்து, அவர்களின் மனக் குறைகளை நீக்கி, நேர்த்திக் கடன்களை நிறைவுசெய்து, முருகனின் அருள் பெறச் செய்யும் சிறப்பான காரியத்தை செய்து வருகின்றன.

இச்சங்கங்கள் மற்றும் குழுக்கள் காட்டைப் பாதுகாக்கும் மேற்குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களை தமது பக்தர்களுக்கு அவசியம் வழங்க வேண்டும்.

நாம் மேற்கொள்ளும் இச் செயற்பாடுகள் மூலம் இந்தக் காட்டையே நம்பி வாழும் சிறிய விலங்குகளான மான், முயல் போன்றவை உயிர் ஆபத்தில் இருந்து தப்பும். காடும் இயற்கை அழகுடன் மிளிரும்.

இயற்கையை அழிக்காமல், மாசு படுத்தாமல் பேணிப் பாதுகாத்தல் என்பது இயற்கையோடு ஒன்றி வாழும், நம்மை விட அறிவு குறைந்த விலங்குகள், பறவைகள் மற்றும் உயிரினங்களுக்கு நாம் செய்யும் மிகப்பெரிய புண்ணிய காரியமாகும்.

இது சுற்றுச் சூழலுக்கு மட்டு மல்ல நமது மனதுக்கும் இனிமை தரும் விடயமாகும். நம்மைச் சுற்றி பசுமை இருக்குமேயானால் நம் மனதும் பசுமையாக இருக்கும்.

பாரம்பரியம் மிக்க இப் புனித பாத யாத்திரையைப் பாதுகாப்போம். இப்பாதயாத்திரைக்கு பலம் சேர்க்கும் பாரம்பரிய காட்டுப் பாதையையும், அதைத் தன்னகத்தே கொண்ட காட்டையும் பாதுகாப்போம்.



ஐங்கரன் விக்னேஸ்வரா



# கிழக்கின் குரல் நடேசனின் தமிழ் ஊடக சேவை

## ஈழத்தில் நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:

**சமூக விடுதலைக்கான கிழக்கின் குரலாய் விளங்கிய ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன் - 2004 மே 31 ஆம் நாள் படுகொலை நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகிறது**

தான் வாழ்ந்த சமூகத்தின் நீதிக்காக அரசியல் சமூக விடுதலைக்காக குரல் கொடுத்த பத்திரிகையாளன் ஒருவனுக்கு அதற்கு பரிசாக நடு வீதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட நாளே (2004 மே 31ஆம் திகதி) நடேசன் படுகொலை செய்யப்பட்ட துயர நாள்.

### சமூக விடுதலைக்கான நடேசன் குரல் :

கிழக்கு பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் தம்பையாவின் படுகொலை பற்றி அந்த கொலை நடந்த அடுத்த ஞாயிறு தனியார் பத்திரிகை ஒன்றில் நடேசன் எழுதிய கட்டுரை வெளியாகியிருந்தது. மிக காரசாரமாகவும், துணிச்சலோடு பல விடயங்களைச் சொல்லியதுமான கட்டுரையாக அது அமைந்திருந்தது.

2004 மே மாதம் 31ஆம் திகதி காலை ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் தனது அலுவலகத்திற்கு செல்லும் வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பத்திரிகையாளர் மரணத்தை எதிர்பார்த்த வேளையிலும் பேனாவை கீழே வைப்பதற்கு மறுத்தவர் நடேசன்.

நான் செத்தாலும் பரவாயில்லை. புற முதுகில் சூடுபட்டுச் சாகக் கூடாது. நெஞ்சில் குண்டு பாய்ந்து வித்தாக விதைக்கப்படுவதையே விரும்புகின்றேன். என்பது நடேசனின் வாசகங்கள். நடேசனின் இந்த கருத்து நிதர்சனமானது என்பது தமிழ் பத்திரிகை உலகம் பின்னர் கண்ட உண்மை.




## மட்டக்களப்பின் ஊடகத்துறை நடேசனுடன் மரணித்ததா?

நடேசனின் மரணத்துடன் மட்டக்களப்பின் ஊடகத்துறை மரணித்து விட்டதா? என்று நடேசன் அவர்களின் 13 வது நினைவு தினத்தில் கேட்கப்பட்டது. மிகக்கடுமையான யுத்த காலத்தில் பல்வேறு வகையான அச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றிய ஊடகவியலாளர் நடேசன் போன்றோர் வாழ்ந்த மட்டக்களப்பு மண்ணில் இன்றைய ஊடகத்துறையின் செயற்பாடுகள் கவலை கொள்ளத்தக்க வகையில் உள்ளது.

ஊடக சுதந்திரம் மீள உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக சொல்லும் இன்றைய காலத்தில் ஊடகவியலாளர்கள் தமிழர்களின் உரிமைப் போராட்டம் சம்மந்தமாக எழுதுவதற்கு பின்னடிப்பதுடன் அதிகாரத்தில் இருப்பவர்கள் செய்கின்ற ஊழல்கள் அநீதிகள் குறித்து எழுதுவதற்கு பயப்படுகின்ற நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில், ஊடகவியலாளர் நடேசன் அவர்களின் தியாகமும் ஊடகத்துறை ஊடாக தமிழர்களின் விடுதலைக்காக அவர் ஆற்றிய அளப்பெரிய சேவையும் நடேசன் அவர்களின் நினைவு தினத்தில் மட்டக்களப்பில் நினைவு கூரப்பட்டது.



## ஈழத்தில் சுயாதீன ஊடக அடக்குமுறை:

ஈழத்தில் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்தும் அரச படைகளின் கொடூர தாக்குதல்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது.

1981 இல் ஈழநாடு எரிப்பு முதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டு வந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூபசிங்கம் தேவகுமார் என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப் பட்டிருக்கின்றார்கள்.

அத்துடன் சுப்பிரமணியம் ராமச்சந்திரன், பிரகித் எக்னலிய கொட என எத்தனையோ ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

## அச்சுறுத்தல் மிகுந்த பணி:

ஐ. நடேசனுக்கு அச்சுறுத்தல்கள் வருவது ஒரு தொடர்கதையாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி ஊடகவியலில் அவருக்கு இருந்த ஆர்வத்தால் அவர் தனது பணியை தொடர்ந்து செய்து வந்தார். கிழக்கில் எல்லாரையும் அவருக்கு தெரியும், அவருக்கும் அனைவரையும் தெரியும்.

நடேசனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாகதான் இருந்தது.


அக்காலத்தில் அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன.

## சிங்கள ஊடகர் படுகொலை :



சிறிலங்காவில் 1990 ம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு நிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங் கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம் - தமிழ்நெற் இணையத்தினுடய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள்.



உண்மைத் தகவல்களை வெளிக்கொண்டு வந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

## நிமலராஜன் படுகொலை:

பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி கொல்லப்பட்டார்.

ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 22 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

## தலைநகரில் சிவராம் கொலை:

தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமற்ற, காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதம் எனச் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் சிங்கள மக்களுக்குப் போதித்துக் கொண்டிருந்த காலகட்டத்தில் தமிழர்களின் போராட்ட நியாயத்தையும், அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்படுவதால் மாத்திரமே இலங்கைத் தீவில் அமைதி நிலவும் என்ற யதார்த்தத்தையும் தர்க்க நியாயங்களோடு சிங்களவர்களுக்கும் புரியக் கூடியவாறு சிவராம் ஆங்கிலத்தில் விளக்கினார்.

சிவராமுடைய எழுத்தின் போக்கை மட்டுமன்றி அன்றைய காலகட்டத்தில் பணியாற்றிய பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்களின் போக்கையும் மாற்றியமைத்தது. பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளுக்கு அப்பால் சிங்களத் தேசியம் பேசிய ஊடகவியலாளர்களுடனும் அவர் திரைமறைவில் தர்க்கிக்க வேண்டியிருந்தது. எவருமே துணிந்து செய்ய முன்வராத ஒரு காரியத்தை கொழும்பில் இருந்து கொண்டே செய்ய முன்வந்த சிவராமின் துணிச்சல் பாராட்டப்பட வேண்டியது.

சிவராம் பத்திரிகைகளில் முன்வைத்த கருத்துக்களுக்காக நேரில் கேள்வி எழுப்பப்பட்ட போதுகளில் அவற்றுக்கு அவர் ஆணித்தரமாகப் பதில் கூறவேண்டி ஏற்பட்டது. தனது கருத்துக்களுக்காக சிங்கள ஊடகவியலாளர்களுடன் மோதவேண்டிய சூழல் உருவான போதிலும் அவர்களுடனான தொழில் முறை உறவை வளர்த்துக் கொள்ள சிவராம் தவறவில்லை.

தமிழ் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகள் சிங்கள ஊடக அமைப்புக்களால் கண்டு கொள்ளாமல் விடப்பட்டபோது ‘இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்’ என்ற அமைப்பை உருவாக்குவதில் முன்னோடியாக நின்றும் செயற்பட்டார். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

## வன்னியின் குரல் சத்தியமூர்த்தி:

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட வன்னியைச் சேர்ந்த அரசியல் ஆய்வாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் படுகாயமுற்று இறந்தார்.

ஊடகத்துறையில் 1990-களில் ஈடுபடத் தொடங்கிய இவர், ‘வெளிச்சம்’ சஞ்சிகை உள்ளிட்ட அச்சு ஊடகங்களில் கவிதைகள், சிறுகதைகளை எழுதி வந்தார். 1990-களின் பிற்பகுதியில் அரசியல் மற்றும் படைத்துறை ஊடகப்பணியில் ஈடுபட்டார். ஈழநாதத்தில் படைத்துறை பத்தியை எழுதி வந்த இவர், ஈழநாடு பத்திரிகையில் ஊடகவியலாளராக செயற்பட்டு அரசியல் படைத்துறை ஆய்வுகளையும் எழுதி வந்தார்.



2003 ஆம் ஆண்டு தொடக்கம் தாயகத்தில் இருந்து ஈழத்து நிலைமைகளை புலம்பெயர் ஊடகங்களுக்கு தொலைக்காட்சிகள், மற்றும் வானொலிகள் வழியாகவும் அச்சு ஊடகங்கள் வழியாகவும் இணைய ஊடகங்கள் வழியாகவும் வெளியிட்டு வந்தவர் சத்தியமூர்த்தி.

## ஈழத்தில் நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் ‘கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்’ என்ற அமைப்பு இலங்கையில் 1992 ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39 க்கும் அதிகம் என்பதே உண்மையாகும்.

நிமலராஜனின் மரணத்திற்கு பிறகு வடக்கு கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39 க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.



# சரித்திரம் கூறும் பெண்கள்



'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்.' என்பதற்கு இணங்க பெண்களின் சிறப்பு பற்றி சற்று நோக்குவோம். பெண்கள் எனப்படுவோர் பல்வேறு கதாபாத்திரங்களை ஏற்று செயற்படுபவர்களாக விளங்குகின்றனர். தாயாக, மகளாக, மனைவியாக, சகோதரியாக செயற்படுகின்றனர். ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கும் ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் இவர்கள் ஆற்றும் பணி அளப்பரியது.

ஆரம்ப கால மனித வாழ்வியல் முறைகளுக்கும் தற்கால வாழ்வியல் முறைகளுக்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. இன்றைய காலம் இயந்திரமயமாகி விட்டது என்றே கூறலாம். எனினும் பெண்களின் பங்களிப்பு அதிகம். தன் உயிரைக் கொடுத்து ஒரு உயிரை இந்த உலகிற்கு தரும் பெண்ணினத்தின் பெருமை சங்ககாலம் முதல் இந்த நூற்றாண்டு வரை போற்றப்பட்டு வருகின்றது. அன்பு, கற்பு, மன உறுதி, பொறுமை, தூய்மை, வாய்மை,



முருகையா
தவமணி தேவி
(வட்ட கொட)



மனத்திறன், விருந்தோம்பல், பெரியோர் மதிப்பு, உபசரிப்பு போன்ற பண்புடையவர்களாக பெண்கள் சிறப்பிக்கப்படுகின்றனர்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் உலகம் அறிவில் ஓங்கித் தழைக்கும் என்றும் புதுமைப் பெண்கள் தோன்ற வேண்டும் என்றும் ஆணுக்குப் பெண் சமம் என்றும் மகாகவி பாரதி கூறினார்.

ஆரம்ப காலங்களில் மனித குலம் தாய்வழி சமூகமாக இருந்தது. வீடு, குடும்பம், குடும்பத்தைக் கவனித்தல் போன்றவற்றில் மாத்திரம் பெண்கள் ஈடுபட்டனர். ஆனால் தற்காலப் பெண்களோ இன, சமூக, கலாசார, மத எல்லைகளை கடந்து சமூகத்தின் எல்லா நடைமுறைகளையும் புரிந்து கொண்டு அவற்றைத் தாண்டி தமது இலக்குகளை அடைய கூடியவர்களாக உள்ளனர். அரசியல், பண்பாடு, பொருளாதாரம், ஆன்மிகம் ஆகியவற்றில் நல்ல மாற்றத்தை உருவாக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

பெண்கள் இச்சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய ஆளுமை படைத்தவர்கள் என்பதை நிரூபிக்கின்றனர். இச்சமூகத்தில் ஆண்களுக்கு பெண்கள் நிகரானவர்கள் என்பதை எப்போதும் வலியுறுத்துகின்றனர்.

இவ்வாறாக பெண்களின் பெருமையை அடுக்கிக் கொண்டே செல்லலாம். தனது குடும்பச் சுமைகளுடன் தனது சமூகத்திற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் இவர்களின் பங்களிப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. எமது நாட்டிற்கு அந்நிய செலாவணியை ஏற்படுத்தி தருவதில் இவர்களின் பங்களிப்பு அதிகமாகவே காணப்படுகின்றது. நாட்டின் பிரதான உற்பத்தி பொருட்களான தேயிலை, ஆடை போன்றவற்றில் பெண்களின் உழைப்பே அதிகமாக உள்ளது. எனவே நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்கு அதிகம் என்று கூறலாம்.

இவ்வாறான பெண்கள் மத்தியில் உடல், உள ரீதியில் அடக்கப்பட்ட பெண்களும் எமது சமூகத்தில் வாழத்தான் செய்கின்றனர். தொழில் நிமித்தம் தமது குடும்பங்களை பிரிந்து உறவுகளைப் பிரிந்து வெளிநாடு செல்லும் பெண்கள் பல இன்னல்களை சந்திக்கின்றனர். ஒரு சிலர் சித்திரவதைகளுக்கு உள்ளாகின்றனர்.

பெண்களுக்காக பெண்கள் உரிமைச் சட்டம், பெண்கள் உரிமை இயக்கம் என்ற பல்வேறு இயக்கங்கள் செயற்பட்டு வருகின்றன. இன்றைய சமூக சீர்கேடுகளை குறைக்க வேண்டுமானால் பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்களாக இருக்க வேண்டும். பெண்களின் பாதுகாப்பும், உரிமையும் உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அந்நாடு வளர்ச்சி அடைய முடியும்.

சங்கக்கால புலவரான ஔவையார் ஒரு தமிழ் பெண் புலவராவார். ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்களை உருவாக்கியவர். இந்நூல்கள் மனித வாழ்வியலை நெறிப்படுத்துபவையாக அமைகின்றன.

அன்னை தெரேசா ஊனமுற்றவர்களையும், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களையும், சமூகத்திற்கு பெரும் பாரம் என ஒதுக்கப்பட்டவர்களையும் கவனிப்பதையே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர். இவ்வாறு உலக வரலாற்றையே திருப்பிய எத்தனையோ பெண்மணிகள் உள்ளனர். அவர்களின் தியாகமும் சாதனையும் போற்றி பின்பற்றக் கூடியவையே.

வீட்டில் அடைந்து கிடந்த பெண்ணியம் மறைந்து விண்ணைத் தாண்டி சாதனைகள் புரியும் பெண்களும் எம்மில் உள்ளனர். எனவே ஒவ்வொரு வீடுகளிலும் பெண்களுக்கான சுதந்திரம் ஏற்படுத்தப்பட வேண்டும். திறமையுள்ள பெண்கள் தனித்து செயற்படுத்தப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.






நவீன்

# சோமாலியாவில் சுயாட்சி கோரும் சோமாலிலாந்து

## ஆபிரிக்காவில் இன்னோர் புதிய தேசம் பிறக்கிறதா?

சோமாலிலாந்து (SomaliLand) 30 ஆண்டுகளுக்கு முன்பு சோமாலியாவிலிருந்து சுயாட்சி கோரி பிரிந்த ஓர் தனிநாடாகும். ஆனால் சர்வதேச அளவில் இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை.

### சோமாலிலாந்தும் சோமாலியாவும்:

எத்தியோப்பியா அரசுக்கு கடல் பாவனையை வழங்கினால், அதற்கு ஈடாக எதிர்காலத்தில் ஒரு கட்டத்தில் சோமாலிலாந்தின் சுதந்திரத்தை தான் அங்கீகரிக்க ஒப்புக் கொள்வதாக எத்தியோப்பிய அரசு முன்பு கூறியது.

1991 இல் சோமாலிய இராணுவ சர்வாதிகாரி சியாட் பாரே தூக்கியெறியப்பட்ட பின்னர், பாலைவனப் பிரதேசமான சோமாலிலாந்து, ஏடன் வளைகுடா கடற்கரையில் பிரிந்து சென்று சுதந்திரத்தை அறிவித்தது. இந்த நடவடிக்கையானது ஒரு பிரிவினைவாத போராட்டமாக நீண்டு தொடர்ந்தது. சியாட் பாரேவின் படைகள் கிளர்ச்சியாளர் கெரில்லாக்களை பிரதேசத்தில் எதிர்த்து பின்தொடர்ந்தன. பல்லாயிரக்கணக்






கான மக்கள் கொல்லப்பட்டனர். மற்றும் பல நகரங்கள் சோமாலிலாந்தில் தரை மட்டமாக்கப்பட்டன.

## சர்வதேச அங்கீகாரம் இல்லை:

சோமாலிலாந்து சர்வதேச அளவில் அங்கீகரிக்கப் படாவிட்டாலும், அங்கு செயல்படும் அரசியல் நிர்வாக அமைப்பு, அரசு நிறுவனங்கள், போலீஸ் படை மற்றும் அதன் சொந்த நாணயத்தைக் கொண்டுள்ளது.

முன்னைய இராணுவ ஆட்சியின் பின்னர் சோமாலியாவில் குழப்பங்கள் மற்றும் வன்முறைகளில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

## எத்தியோப்பியா-சோமாலிலாந்து கடல் ஒப்பந்தம்:

எத்தியோப்பியா-சோமாலிலாந்து ஒப்பந்தத்தை ஆக்கிரமிப்புச் செயல் என்று சோமாலியா அழைக்கிறது.

ஜனவரி 2, 2024 அன்று சோமாலியாவின் மொகடிஷுவில் எத்தியோப்பியா-சோமாலிலாந்து துறைமுக ஒப்பந்தம் தொடர்பாக சோமாலியாவின் ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

நிலத்தால் முழுமையாக சூழப்பட்ட எத்தியோப்பியா, சோமாலிலாந்தின் சுய - அறிவிக்கப்பட்ட குடியரசுடன் கடல் அணுகல் தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை 'ஆக்கிரமிப்பு' என்று சோமாலியா அரசு விவரித்துள்ளது.

சோமாலிலாந்துடன் எத்தியோப்பியா ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து சோமாலிய அதிபர் ஹசன் ஷேக் முகமது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உரையாற்றினார்.

அத்துடன் சர்ச்சைக்குரிய இந்த ஒப்பந்தத்தின் முழு அம்சத்தை எத்தியோப்பியா உறுதிப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக, எத்தியோப்பியாவின் பிரதம மந்திரி அபி அகமதுவின் அலுவலகம், 'கடலுக்கான அணுகலைப் பாதுகாப்பதற்கும், துறைமுகங்களுக்கான அணுகலைப் பன்முகப்படுத்துவதற்கும்' புரிந்துணர்வு ஒப்பந்தம் (M-oU) எனப்படும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாகக் கூறியது. எத்தியோப்பியாவின் பிரதம மந்திரி அபி முன்னர் கடல் அணுகலை தனது நாட்டிற்கு 'இருத்தலியல் பிரச்சினை' என்று விவரித்தார். அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரெட்வான் ஹுசைன், எத்தியோப்பியாவிற்கு கடலில் 'குத்தகைக்கு விடப்பட்ட இராணுவ தளத்தை' அணுகுவதற்கு இந்த ஏற்பாடு உதவும் என்றும் கூறினார். ஆனால் அவர் கூடுதல் விவரங்களை வழங்கவில்லை.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு நோக்கத்தின் அறிக்கையாகக் கருதப்படுகிறது மற்றும் சட்டப்பூர்வமாக பிணைக்கப்பட்ட ஒப்பந்தத்திற்கு வழிவகுக்கும் எனவும் எத்தியோப்பியாவின் பிரதம மந்திரி அலுவலகம் கூறியது.

## சோமாலியா அரசு கண்டனம்:

ஆயினும் இந்த வளர்ச்சியை இரு தரப்பினரும் ஒரு பெரிய இராஜதந்திர நடவடிக்கையாக சித்தரித்து வருகின்றனர். சோமாலியா, சோமாலிலாந்தை தனது பிரதேசத்தின் ஒரு பகுதியாகக் கருதுவதால், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு கோபமாக பதிலளித்துள்ளது. எத்தியோப்பியாவுக்கான தனது தூதரை திரும்ப அழைப்பதாக அது கூறியது. இந்த ஒப்பந்தம் செல்லாது என்றும் அதன் இறையாண்மையை மீறுவதாகவும் சோமாலியா அரசு கூறியது.


சோமாலியா அரசு இந்த நடவடிக்கையை ஒரு ஆக்கிரமிப்பாகக் கருதுகிறது. ஏற்கனவே பல சவால்களுடன் போராடி வரும் பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இது ஒரு தடையாக உள்ளது என்று மேலும் கூறியுள்ளது. சோமாலியாவின் பிரதமர் ஹம்சா அப்டி பாரே, மக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

'சோமாலியா நாட்டின் பாதுகாப்பில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என்பதை நான் அவர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். எங்கள் நிலம், எங்கள் கடல் மற்றும் எங்கள் காற்றின் ஒரு பகுதியை மீற முடியாது, நான் அதை எல்லா சட்ட வழிகளிலும் பாதுகாப்பேன்' என்று அவர் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

## சோமாலிலாந்து பிரிய தடை:

பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ஹசன் ஷேக் மொஹமட் 'சோமாலியாவின் ஒரு துண்டையும் கொடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை' என்று கூறியதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.






‘சோமாலிலாந்து, நீங்கள் சோமாலியாவின் வடக்குப் பகுதிகள். எத்தியோப்பியா உங்களுக்கு எந்த அங்கீகாரமும் இல்லை,’ என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மற்றும் ஆப்பிரிக்க ஒன்றியம் இந்த விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்றும் சோமாலியா அரசு கூறியுள்ளது.

எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் பிரதமர் அபியும் சோமாலிலாந்து அதிபர் மியூஸ் பிஹி அப்டியும் ஜனவரியில் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் சரியான விவரங்கள் தெரியவில்லை.

எத்தியோப்பியா எதிர்காலத்தில் சோமாலிலாந்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கும் என்ற ஒரு பகுதியை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கியதாக திரு அப்டி கூறினார். சோமாலிலாந்தின் வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில், ‘இந்த ஒப்பந்தம் எத்தியோப்பியாவின் கடற்படைப் படைகளுக்கு கடலை அணுகுவதை உறுதி செய்கிறது. சோமாலிலாந்து குடியரசின் முறையான அங்கீகாரத்தின் மூலம் இது நமது நாட்டிற்கான குறிப்பிடத்தக்க இராஜதந்திர மைல்கல்’ எனக் குறிக்கிறது.

## எத்தியோப்பிய கடற்படைக்கு அனுமதி:

‘எத்தியோப்பிய கடற் படைகளுக்கு 20 கிமீ (12 மைல்) கடல் அணுகல் பரிமாற்றத்தில், 50 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படும்’ என்று சோமாலிலாந்து குடியரசின் ஜனாதிபதி கூறியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சோமாலியாவில் சுயாட்சி கோரும் சோமாலிலாந்து பிரச்சனையில் ஆபிரிக்காவில் இன்னோர் புதிய தேசம் பிறக்கிறதா என்பது எதிர்காலத்தில் புலப்படும்.




எத்தியோப்பியா எதிர்காலத்தில் சோமாலிலாந்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கும் என்ற ஒரு பகுதியை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கியதாக திரு அப்டி கூறினார். சோமாலிலாந்தின் வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில், இந்த ஒப்பந்தம் எத்தியோப்பியாவின் கடற்படைப் படைகளுக்கு கடலை அணுகுவதை உறுதி செய்கிறது. சோமாலிலாந்து குடியரசின் முறையான அங்கீகாரத்தின் மூலம் இது நமது நாட்டிற்கான குறிப்பிடத்தக்க இராஜதந்திர மைல்கல் எனக் குறிக்கிறது.

## தெற்காசிய நாடுகளுக்கான மோடியின் முதற் பயணம்



# பிரதமராகப் பதவியேற்ற பின்னரான காய்நகர்த்தல்



இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தனிப் பெரும் வல்லரசாக மாற முற்படும் இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி புதுடில்லியில் இடம்பெற்ற நிகழ்வில் இந்திய ஜனாதிபதி முன்னிலையில் கம்பீரமாக பதவியேற்றார். இவ்வாறு அவர் பதவியேற்பது மூன்றாவது முறை. இதற்கு முன்னர் இந்தியாவில் இவ்வாறு தொடர்ச்சியாக மூன்று முறை பிரதமராக பதவியேற்றவர் சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரான ஜவர்ஹலால் நேரு மாத்திரமே.

இலங்கையில் சிறிமாவோ பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்க மற்றும் ரணில் விக்கிரமசிங்க பல சந்தர்ப்பங்களில் பிரதமர் பதவி வகித்திருந்தாலும் கூட அவர்களுள் ஒருவரும் தொடர்ச்சியாக மூன்று முறை பிரதமராக பதவியேற்றதில்லை.

இரு முறைகளுக்கு மேல் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாத காரணத்தினால் ஆர்.பிரேமதாச, மைத்திரிபால சிறிசேன மற்றும் கோட்டாபய ராஜபக்ச தவிர்த்த ஏனைய ஜனாதிபதிகள் அனைவரும் இரு தடவைகள் மாத்திரமே பதவி வகித்துள்ளனர்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட, அயல்நாடுகளின் அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட 8000 பிரதம விருந்தினர்கள் மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துக் கொண்டனர். எனினும் பாகிஸ்தான் மற்றும் சீனாவின் எந்தவொரு அரச தலைவர்களும் நிகழ்வில் கலந்துக் கொள்ளவில்லை.

## இந்தியா- சீனா உறவு

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு இயல்புநிலைக்குத் திரும்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டில் கிழக்கு லடாக் எல்லையில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய - சீன இராணுவ வீரர்களிடையே மோதல் ஏற்பட்டது. இது தொடர்பில், பல பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் இரு நாடுகளுக்கிடையிலான எல்லை மோதல் இன்னும் நீடித்து வருகிறது. இந் நிலையில், இந்திய மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு பிரதமர் மோடிக்கு சீன வெளியுறவு அமைச்சகம் வாழ்த்து தெரிவித்திருந்தது.

குறித்த வாழ்த்தில் இந்தியா - சீனா இடையிலான உறவு இயல்புநிலைக்குத் திரும்ப வேண்டும் எனவும் அதற்கான நடவடிக்கைகள் தொடரும் எனவும் சீன மத்திய வெளியுறவுத் துறைச் செயலர் ரண்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

> இந்தியாவுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்த இது நல்ல சந்தர்ப்பமாக பார்க்கப்படுகிறது. நுணுக்கமான அரசியல் அறிவைக் கொண்ட ரணில் இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளை மேற்கொண்டு வருவதாகவும் இருக்கலாம் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. எனினும், தற்போதைய தேர்தல் நிலைமையின் படி, சட்ட விரோதமாக ரணில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் விட்டால் அதற்கு மேற்கத்தேய நாடுகளும் முக்கியமாக இந்தியாவும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமா என்ற கேள்வி தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியா- பாகிஸ்தான் உறவு

இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே நீண்ட நாட்களாக பல்வேறு பிரச்சினைகள் நிலவி வருகின்றன. தற்போது இரு நாட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு நீண்ட நாட்களாக நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான சூழலை இந்தியா உருவாக்கும் என நம்புவதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.இந்தியா உட்பட அனைத்து அண்டை நாடுகளுடனும் நல்லுறவை பேண பாகிஸ்தான் விரும்புவதாக தெரிவித்துள்ளது.

இந்தியாவுடன் காணப்படக்கூடிய ஜம்மு-காஷ்மீர் விவகாரம் உள்ளிட்ட இரு நாடுகளிடையே உள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண பல்வேறு முயற்சிகளை பாகிஸ்தான் மேற்கொண்டு வருகிறது.

## இந்தியா - இலங்கை உறவு

பிரதமர் நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பதவியேற்றமை ஒருவகையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதகமாக அமையும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தியாவுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்த இது நல்ல சந்தர்ப்பமாக பார்க்கப்படுகிறது. நுணுக்கமான அரசியல் அறிவைக் கொண்ட ரணில் இந்தியாவுடன் நெருக்கமான தொடர்புகளை மேற்கொண்டு வருவதாகவும் இருக்கலாம் என எதிர்ப்பார்க்கப் படுகிறது. எனினும், தற்போதைய தேர்தல் நிலைமையின் படி, சட்ட விரோதமாக ரணில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் விட்டால் அதற்கு மேற்கத்தேய நாடுகளும் முக்கியமாக இந்தியாவும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்குமா என்ற கேள்வி தற்போது ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இலங்கையுடன் சீனா மேற்கொண்டுள்ள தொடர்புகளை குறைக்க இணைக்கம் தெரிவிக்கும் எந்தவொரு நாட்டுக்கும் இந்தியாவின் மற்றும் மேற்கத்தேய நாடுகளின் பூரண ஆதரவு கிடைக்கும்.

இவ்வாறான ஒரு நிலையிலேயே, இந்திய பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கைக்கு தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஏற்கனவே மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக மற்றும் ரணில் பிரதமராக பதவி வகித்திருந்த 2016 இல் நரேந்திர மோடி இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தலைநிமிரச் செய்தீர்கள்!

தமிழீழ அணியாக
தரணியில் தலைநிமிர
தாயுமானவர் வழியில்
விளையாடிய
வீரப் புதல்விகளே!

களமாடிய உங்கள்
பாதங்களின் துரித வேகம் கண்டு
வியப்புடன் விழிகள் விரிய
துடிப்புடன் பார்த்திருந்தோம்.

யாருக்கும்
நாம் சளைத்தவர்கள் அல்ல என
ஓங்கி.. செயலில் உரைத்தீர்!
ஒருகணம்
பேசுவதற்கு வார்த்தைகள் எதுவுமின்றி
ஆனந்த வெள்ளத்தில்
திக்குமுக்காடிப் போனோம்.

ஒற்றுமையாய்
ஓரணியாய் கைகோர்த்து
விளையாடிய வேகம்
கண்டு
மெய் சிலிர்த்துப் போனோம்!

ஏதிலியாய்
அன்னிய தேசத்தில்
கடும் பிரயத்தனத்தில்
முன்னேற்றம் பெற்றவர்கள்!

வலி சுமந்த மண்ணின்
விதைகள் நீங்கள்!
இன்று
வரலாற்று நாயகராய்
வலம் வர வைத்தவர்கள்!
உள்ளங்கள்
பெருமிதம் கொள்ளட்டும்!
தலைசாய்த்து வணங்குகிறோம்!

புலம் பெயர்தேசங்களில்
வாழுமிடங்கள் வெவ்வேறாகியும்
மொழியால் ஒன்றாகி
தமிழீழ அணியாகி
வீரமுடன் விளையாடினீர்..!!

சிலபல கவலைகள்
தனித் தனியாக
தவிர்க்க முடியாமல்
வந்தபோதும்
உள உறுதியோடு
சிறப்பாக விளையாடி
தமிழ் நெஞ்சங்களில்
நிலையான இடம்பெற்றீர்!!

தோல்விகளே
வெற்றியின் முதற்படி என்பார்கள்.
விளையாடிய
உங்கள் கரங்களை வலுப்படுத்த
நாமும் இணைகிறோம்!

வரும் காலங்களில்
வெற்றிக்கனி
உங்கள் கைகளில் தவழும்.
இது உறுதி!!
இலக்கினை அடையும்வரை
உங்கள் கரங்களுடன்
நாமும் இணைந்திருக்கிறோம்!

**கலையமுதினி**



பவானி

# இடப்பெயர்வும் நானும்

பாகம்: 05

இழப்புகளுடன் எறிகணை, பீரங்கி, கிபிர், தாக்குதல்களும் பரவலாக காணப் பட்டமையால், மீண்டும் அங்கிருந்து இடம்பெயர ஆயத்தமானோம். அங்கிருந்து பொக்கணைவெளி என்று வெட்டவெளியில் இரண்டு நாட்கள் தங்கினோம். ஆனால் தொடர்ந்து அங்கு எம்மால் தங்க முடியவில்லை.

மீண்டும் நடந்து மாத்தளன் வைத்தியசாலையின் பின்புறமாக ஒரு பனங்கூடலில் தங்கினோம். அன்றுதான் அந்த இடத்தை அடைந்தோம். தரப்பாள் கொட்டில் போடவில்லை. அங்கு தெரிந்தவர்கள்தான் இருந்தார்கள். எனவே அவர்களுடன் அன்றைய பொழுதை கழித்து, நாளை கொட்டில் போட்டு காப்பரண் வெட்டுவோம் இருந்தேன்.

ஏனெனில் திரும்பத் திரும்ப ஓடுவதால் உளமும் உடலும் சோர்ந்து போய் இருந்தது. எது எப்போது எப்படி நடக்கும்என்று தெரியாதசூழலில்நாமிருந்ததோம். திகதி பெரியஅளவில் ஞாபகமில்லை. நாம் மாலை 3 மணி போல சாப்பிடஆயத்தமானோம். எங்கிருந்தோ கூவிக் கொண்டு வந்த எறிகணை என்னிலிருந்து கிட்டிய தூரத்தில் தரப்பாள் கொட்டில் மேல் விழுந்தது.

அக் கொட்டிலில் இருந்த அத்தனை பேரும் உடல் சிதறி பலியாகினர். யார் எவர் என்று எதுவுமே தெரியாது. ஆனால் அந்தக் காட்சி இன்றுவரை மனதை விட்டு அகலவில்லை முள்ளி வாய்க்கால் என்றாலே எமக்கு நாம் பட்ட அவலங்கள், வலிகள், இழப்புக்கள் மட்டுமே தெரிகிறது. எத்தனை துயர்களை நாம் அன்று சந்தித்தோம். அன்று எமக்காக குரல் கொடுக்க எந்த நாடும் முன்வரவில்லை.

நான் இன்று ஒரு பாதுகாப்பான நாட்டில் அகதியாக வாழ்ந்தால் கூட விமான, ஹெலி சத்தம் என்னை அதிரச் செய்கிறது. பாதுகாப்பை மனம் தேடுகிறது இதயம் படபடவென அடிக்கிறது. இங்குள்ளவர்கள் ஏன் இப்படி விமான சத்தத்திற்கு பயப்படுகிறீர்கள்? என்று கேட்டு சிரிக்கிறார்கள். பைத்தியம் என்கிறார்கள்.

ஆனால் அந்த வலி, வேதனையின் பின்னே சிதறிய உடல்களோடு உறவுகள் கதறிய ஓலங்கள், குழந்தைகளின் அழுகை ஒலி என வலிகள் சுமந்த நினைவுகள் பல அதில் உள்ளன என்பது அவர்களுக்கு எப்படிப் புரியும்? அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். என்றுமே





மறக்க முடியாத துன்ப நினைவுகள் அவை. என்றுமே எம்மை விட்டு அழியப் போவதில்லை.

தொடர்ந்தும் முப்படைத் தாக்குதல் அகோரமாகியது. நாளும் காயக்காரும், இழப்புகளும் அதிகரித்தது. சூனியப் பிரதேசம் என்று வலைஞர் மடப் பகுதியை அறிவித்தார்கள். நாம் அங்கே இடம் பெயர ஆயத்தமானோம். நான் மாத்தளன் ஆஸ்பத்திரியில் உள்ள காயப்பட்டவர்களை பார்க்கச் சென்றேன்

பிள்ளைகளை தனியே விட்டு போகமுடியாது என்பதால் கூட்டிச் சென்று ஒரு மரத்தின்கீழ் விட்டு காயப்பட்டவர்களைப் பார்ப்போம் என நினைத்தேன். ஒரு மரத்தடியில் நிறையப் பேர் படுத்திருந்தார்கள்.

அவர்களிடம் போய் பார்ப்போம் தெரிந்தவர்யாராவது இருக்கிறார்களா என நினைத்து போனால்...... அவ்வளவும் இறந்து போனவர்களின் உடலங்கள். உறவுகள் ஏதுமின்றி தரையில் கிடத்தி இருந்தார்கள். நாம் இறந்த உறவுகளுக்கு செய்யும் இறுதிக்கடனைக் கூட செய்யமுடியாமல் அனாதைப் பிணங்களாக இருந்தது வேதனையாகும். நான் இறந்தாலும் எனக்கும் இதே நிலைதான். அதில் நூற்றுக் கணக்கான பிணங்கள் இருந்தன. பார்த்ததும் பதறி ஓடிவந்துவிட்டேன்.

அங்கிருந்து மீண்டும் நடை நடையாக நடந்து வலைஞர் மடம் வந்தோம் அங்கு ஒரு வெளியில் எமக்கான தரப்பாள் கொட்டில் போட்டோம். நாம் ஒரு பள்ளமான பிரதேசத்தில் தான் இருந்தோம். எம்மைப் போல் நிறைய உறவுகள் அங்கிருந்தார்கள். நானும் எனது அக்காவின் மகனுடைய குடும்பத்தில் மூவருமாக ஆறுபேர் ஒன்றாக இருந்தோம். எமக்கான காப்பரணை நாமிருந்த கொட்டில் உள்ளேயே வெட்டினோம்.

பின்னர் பனைமரம் வெட்டி வந்து குற்றிகளாக்கி காப்பரண் மீது அடுக்கி, சாறிகளை கிழித்து தலையணை உறைகளாக தைத்து, மண் நிரப்பி அதன் மேல் போட்டோம். கூடுதலான நேரங்கள் பிள்ளைகள் காப்பரண் உள்ளேயே இருந்தார்கள். இரவில் அதனுள் முடங்கி படுப்போம். நிம்மதியான உணவு, உறையுள், வாழ்க்கை இல்லாமல் வாழ வேண்டுமென வாழ்ந்த வாழ்க்கை.

நான் என் வேலை நிமித்தமாக நிவாரணம் கொடுக்க வலைஞர் மடம் கடற்கரைக்கு சென்று விடுவேன். போகும் போது மனசு வலிக்க, பிள்ளைகளை பத்திரமாக இருக்கும்படி கூறி சென்று விடுவேன். மனதை திடப்படுத்தி தான் செல்வது. எங்கே எந்த வடிவில் சாவு வரும் தெரியாது. எனக்கோ பிள்ளைகளுக்கோ ஏதாவது நடந்தால் என்ன செய்வது என்றே இருக்கும். போய் வேலை முடிந்து வந்து பிள்ளைகளை கண்டால் ஏதோ சாதனை நிகழ்த்தியது போல மனம் இருக்கும்.

ஒவ்வொரு நாளும் நிவாரணப் பணிக்காக போய் வருவோம். சில நாட்களாக முப்படைத் தாக்குதலுக்கு மத்தியிலும் வலியோடு நம் வாழ்க்கை போய்க்கொண்டிருந்தது. இயற்கையும் எம்மீது கோபம் கொண்டது போலும். ஒருநாள் நாம் நிவாரணப்பணி முடிந்து வரும்போது அடைமழை பெய்தது.

நாம் பார்த்த காட்சிகள் மிக அவலமானது. பள்ளமான வெளியில்தான் பெரும்பாலான மக்கள் குடியிருந்தோம். பலரது பொருட்கள் வெள்ளத்தில் அடித்துச் சென்று கொண்டிருந்தன. அப் பிரதேசம் முழுவதும் வெள்ளக்காடாக இருந்தது. சிறு குழந்தைகள், முதியவர்கள் என அனைவரும் மழை வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

வெள்ளம் வருவது இயற்கை என்றாலும் எமது இடம் பெயர்ந்த நிலையில் அதை சமாளிப்பது மிகவும் கடினமானது. காப்பரண்கள் அனைத்தும் வெள்ளத்தால் மூழ்கிவிட்டன. பனைமரக் குற்றிகள் மீதே பொருட்கள் வைத்திருந்தமையால் தப்பி விட்டன. பிள்ளைகளும் அதன் மீதே இருந்தார்கள். அந்த பகுதியில் வாழ்ந்த அனைவர் நிலையும் இவ்வாறே இருந்தது.

மரப் பெட்டியொன்றை உடைத்து, ஒரு சிறிய இடத்தில் அடுப்பு மூட்டி அடுத்த நாள் றொட்டி சுட்டு சாப்பிட்டோம். அயல்களில் இருந்தவர்களுக்கும் பகிர்ந்தளித்து உண்டோம். எறிகணை விழுந்தால், கிபிர், பீரங்கி தாக்கினால் சிதறி பலியாவதை தவிர வேறு வழியில்லை. மனங்கள் மரத்து போய் இருந்தன.

குருவிக்கூடு போல நாம் சேகரித்து மகிழ்வாக வாழ்ந்த வாழ்க்கை அழிந்து, இன்று வாழ வேண்டுமா? என விரக்தியோடு, சாவை எந்நேரமும் எதிர்பார்த்து இருந்தோம். நாம் அனுபவித்த வேதனைகள், வலிகள், இழப்புக்கள் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அன்றாட எம் இயல்பு வாழ்க்கை பாதித்து சாவு எப்போதும் வரலாம் என தூக்கு கயிற்றில் தொங்கும் நிலையாக நாமிருந்ததோம்.

இவ்வாறு எதிரியின் தாக்குதல், இயற்கைச் சீற்றம், விசபாம்புகள், பூச்சிகள் கடி என எம்மை மேலும் தாக்கின. அன்றைய இடப்பெயர்வு சூழலில் இயற்கை கூட எமக்கு எதிராக இருந்தது. இவ்வாறு காலம் நகர்ந்து கொண்டிருந்தது.

கூடுதலான நேரம் எமது பிள்ளைகள் காப்பரண்கள் உள்ளேயே இருப்பார்கள். அக்கம் பக்கமாக எங்களோடு தங்கியிருந்தவர்களை நம்பித்தான் நாம் எமது நிவாரணம் கொடுக்கும் வேலைக்குச் செல்வோம். எமது அயலில் சுற்றி எட்டுச்சிறுவர்கள் இருந்தார்கள். பிள்ளைகளின் மனநிலை இயல்பாக இல்லை. பக்கத்தில் ஒரு அண்ணன் மரக்குற்றிகளால் சுற்றி அடுக்கி, பாதுகாப்பரண் ஒன்றுசெய்து இருந்தார். அதில் பிள்ளைகளின் மனநிலையை மாற்றுவதற்காக அவர்களை அங்கு வந்து விளையாடும் படி கூறினார். தான் அவர்களை பார்த்துக் கொள்வதாக கூறினார்.

காலைச்சாப்பாடு முடிந்த கையுடன் அந்த அயலிலுள்ள சிறுவர்கள் எட்டுப் பேரையும் கூட்டிச் சென்று அவர்கள்

வீட்டில் விளையாட விட்டுவிட்டு, நான் எங்கள் கொட்டிலுக்கு வரும் வழியில் என்னுடன் வேலை செய்பவர் மனைவியுடன் ஒருநிமிடம் தான் பேசினேன். எனது கொட்டில் வாசலுக்கு நான் வரவில்லை. நான் நின்று பேசிய இடத்தில் பலத்த சத்தத்துடன் திடீரென எறிகணை விழுந்து வெடித்தது.

மயிரிழையில் தப்பி விட்டேன். சிறிது நேரத்தில் பிள்ளைகளும் விளையாடாமல் வந்துவிட்டார்கள். இப்படி இப்படி நிறைய சம்பவங்கள் நெஞ்சில் நிறைந்து உள்ளன. ஒவ்வொரு சம்பவமும் இழப்புக்களும் மனதின் ஆழத்தில் புதைந்து இன்றுவரை நிம்மதியற்ற வாழ்க்கையைத் தான் தருகிறது. இந்த காலப்பகுதியில் தான் ஆனந்தபுரம் சமர் நடந்து முடிந்திருந்தது. இழப்புக்களின் உச்சம் கண்டு உள்ளம் நொந்து உயிரின்றி வாழ்ந்து காலம் அது.

தொடரும்.....

# வாசிப்பினை பரவலாக்குவதன் மூலமே மொழிக் கல்வியறிவில் மேம்படலாம்




## சிட்னி நூல் வெளியீட்டில் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. தே. செந்தில்வேலவர் உரை:



புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழியை அறியாமலேயே எதிர்கால குழந்தைகள் வளர வேண்டிய அவலம் நேர்கிறது. வெளிநாடுகளில் வாழ நேர்ந்துள்ள குழந்தைகளுக்கு தமிழ் மொழி மட்டுமல்ல, மொழியின் அடிப்படையில் உருவான பண்பாடு, இசை உள்ளிட்டவை எதுவும் தெரியாது. முற்றிலும் அந்நியமான சூழ்நிலையிலே வளர நேரிட்டுள்ளது.

ஆயினும் இங்கே அவுஸ்திரேலியாவில் பல்வேறு தமிழ் பாடசாலைகள் மாணவர்களுக்கு தமிழ் கற்பிப்பதையிட்டு மிக மகிழ்ச்சியாக உள்ளது. இதேவேளை இன்றைய நிகழ்வான ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று

நூல்கள் வெளியீட்டில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டமையை பார்க்கையில் மகிழ்ச்சியாக உள்ளது என சிட்னியில் நிகழ்ந்த நூல் வெளியீட்டு நிகழ்வில்தினகரன் பிரதம ஆசிரியர் திரு. தே. செந்தில் வேலவர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

உலக மொழிகளில் இன்றளவும் தனது திறன் குன்றாது உயிர்ப்புடன் வாழ்வது தமிழ் மொழியே. இந்தப் பெருமை நீடித்து வளர்ந்தோங்கச் செயல்பட வேண்டியது நமது வரலாற்றுக் கடமையாகும்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு இலங்கை பத்திரிகைகள் பாரிய பங்களிப்பினை ஆற்றி வருகின்றன. குறிப்பாக தேசியத் தினசரிகளான வீரகேசரி, தினகரன். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு இப்பத்திரிகைகளின் பங்கு அளப்பரியது. மக்களை மிக அதிகளவில் சென்றடையும் எழுத்து ஆவணங்களாக பத்திரிகைகள் விளங்குகின்றன.

கடந்தகால சமூகத்தின் சமய, சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பரப்புக்களின் போக்கில் பத்திரிகைகளின் செல்வாக்குக் குறைத்து மதிப்பிட முடியாதது.

வரலாறு எழுதுதலில் முதல் நிலைத் தகவல் வளங்களான பத்திரிகைகளின் உசாத்துணை அடிப்படையானதும் முக்கியமானதும் ஆகும். மக்களின் சிந்தனையில் பத்திரிகைகள் முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன அல்லது செலுத்த முற்படுகின்றன என்பதும் உண்மையே.

ஒவ்வொரு நாட்டிலும் பத்திரிகைத் துறை என்பது மிக முக்கிய கூறுகளில் ஒன்றாகும். சில நூற்றாண்டுகளுக்கு முன் சென்று பார்த்தோமானால், செய்தி மற்றும் தகவல்கள் எவ்வாறு சமூகத்தின் அடிப்படை அம்சமாக விளங்கியுள்ளது என்பதனை அறியமுடிகின்றது. வாசிப்பினைப் பரவலாக்கியதன் மூலம் கல்வியறிவில் குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுத்திய இப்பத்திரிகைகள் செய்திகளையும் தகவல்களையும்












மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதில் முக்கிய பங்களிப்பினை ஆற்றியுள்ளன.

இன்று பத்திரிகைகளே உலகளாவிய தொடர்பு மொழியாகப் பேருருவம் எடுத்துள்ளன. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு மொழிகளில் பத்திரிகைகள் வெளிவந்தாலும், அவற்றின் பொதுக்கருத்து மக்கள் தொடர்பு என்பதேயாகும் என தினகரன் பிரதம ஆசிரியர் திரு. தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார். சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் கடந்த வெள்ளி ஜூன் 7ம் திகதி நடைபெற்றது.

சிட்னியில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமையுரையை எழுத்தாளர் திரு. மாத்தளை சோமு உரையாற்றுகையில், புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியை பேணிக் காத்திட வீடுகளில் குழந்தைகளுடன் தாய் மொழியில் உரையாட வேண்டிய அவசியத்தையும்வலியுறுத்தி உரையாற்றினார்.




எதிர்காலத்தில் தமிழ் சமுதாயம் மேலும் வளர்ச்சியுற ஐங்கரன் விக்கினேஸ்வராவின் எழுத்துப்பணி பங்களிப்பை வழங்கும். இது போன்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகளை நடாத்தி, எதிர்கால தமிழ் சந்ததியினர்க்கு வழிநடத்தும் தன்னம்பிக்கையைக் கொடுக்க வேண்டும் என தினகரன் பிரதம ஆசிரியர் திரு. தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார். பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகியஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் திரு. மாத்தளை சோமு ஆற்றினார். அதன்பின் பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை திரு. தனபாலசிங்கம் நிகழ்த்தினார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர். ஹாரூன் காசிம் அவர்கள் ஆற்றினார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் ஆற்றினார். இந்நூல் வெளியீட்டு நிகழ்வில்தினகரன் பிரதம ஆசிரியர் திரு. தே. செந்தில் வேலவர் சிறப்புரை நிகழ்த்தினார்.அத்துடன் திரு. திருநந்தகுமார் அவர்களும், பாடும் மீன் சிறிஸ்கந்தராஜா இவர்களும் சிறப்புரை ஆற்றினர்.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெற்ற நூல் வெளியிடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பெருந்திரளான சிட்னி வாழ் மக்கள் கலந்து கொண்டனர்.

# வனைவு

**கொற்றவை** **அங்கம்: 21**

இரவு முழுவதும் ஆனந்தனுக்கு நித்திரையே வரவில்லை. நாளை வெண்ணிலாவுக்கு பரீட்சை ஆரம்பமாகிறது. அதனால் இருக்குமா? அதுவும் ஒரு காரணம்தான். சின்னஞ்சிறு குழந்தையாக அவளை முதன்முதலில் கைகளில் ஏந்திய நாள் இப்போதுதான் போல இருக்கிறது. அதற்கிடையில் எத்தனை வருடங்கள் கடந்து விட்டன? வருடங்கள் மட்டுமா கடந்தன? எத்தனை அனுபவங்கள் எத்தனை இடர்கள் எத்தனை துயர்களைக் கடந்து வந்திருக்கிறார்கள் அவர்கள்? இடையில் நிரந்தரமாகிவிடுமோ என்ற அச்சத்தைத் தந்த ஒரு பிரிவு வேறு.

அத்தனைக்கும் மத்தியில் இவ்வளவு அருமையாக இந்தக் குழந்தையை வளர்த்து விட்டதற்கு அவன் சாந்திக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும். படிப்பைப் பொறுத்தவரை இது வெண்ணிலா சந்திக்கப் போகும் முதலாவது பெரிய பரீட்சை. தன் வாழ்வில் ஒரு மைல் கல்லாக அவள் இதைப் பார்க்கிறாள். வெண்ணிலாவுக்கு மட்டுமல்லாது அவனுக்கும் சாந்திக்கும் கூட ஒரு எதிர் பார்ப்புடன் கூடிய பதட்டம் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் இது அதுவல்ல. அதையும் தாண்டிய ஒரு உணர்வு. ஏதோவொரு அசம்பாவிதம் நடக்கப்போவதை எதிர்பார்த்து மனம் துடிப்பது போல ஒரு உணர்வு. சாந்தி நலமாக இருக்கிறாளா என்று போய்ப் பார்க்க வேண்டும் என்று மனம் ஏங்கியது. அது விடியற்காலையில் அவனின் ஃபோன் கிணுகிணுக்கும் வரையிற்தான்.



‘கலா எங்களை விட்டுப் போய்விட்டாள்’ என்ற தகவல் வரும்வரைதான்.

அப்பா! ஆரப்பா இவ்வளவு வெள்ளன கூப்பிடுகினம்? படித்துக் கொண்டிருந்த வெண்ணிலா கேட்டாள்.

‘‘வேலைக்கு வெள்ளென வரலாமோ எண்டுதான் அடிச்சவை... நான் உன்னை சோதனைக்கு கொண்டு போய் விட்டிட்டு பிறகுதான் போவன்... இடையில வந்து சோதனை முடிய வீட்டை கூட்டி வந்து விடுவன்... என்ன? பாட்டி இங்கதான் இருப்பா... நீ சாப்பிட்டு, கொஞ்சம் படுத்திட்டு பிறகு ஆறுதலாப் படிக்கலாம்... என்னடா...?’’ குரலில் எதையும் காட்டிக்கொள்ளாது சாதாரணமாகப் பதில் சொன்னான் அவன்.

வெண்ணிலாவை பாடசாலையில் கொண்டுபோய் விட்ட பின்னர்தான் டானியல் அண்ணர் வீட்டிற்கு போனான் ஆனந்தன். இப்படியொரு அசம்பாவிதம் நடந்தால் என்னென்ன செய்ய வேண்டுமோ அதற்கான அத்தனை ஒழுங்குகளையும் அவன் ஏற்கனவே செய்திருந்தான். டானியல் அண்ணருக்கு ஆறுதலாக இருப்பதைத் தவிர இனி அவன் அங்கு செய்வதற்கு எதுவுமில்லை.

முன்னரே ஒழுங்கு செய்திருந்தபடி செத்தவீட்டிற்கான பெரிய கொட்டில் ஒன்று போடப்பட்டிருந்தது. கொட்டில் கொள்ளாத கூட்டம். வளவுக்கு வெளியே தெருவிலும் ஆட்கள் நின்றார்கள். உள்ளே கலாவின் உடலுக்கு அருகில் ரெஜினா அக்கா அமைதியாக உட்கார்ந்திருந்தா. அழுதழுது முகம் உப்பியிருந்தது. மறுபுறத்தில் டானியல் அண்ணர் நின்று கொண்டிருந்தார். ஆனந்தன் அருகில் போனதும் அவனின் கைகளைப் பிடித்தார். ஆனந்தனுக்கு கலாவின் உடலைப் பார்க்க முடியவில்லை.

யாரோ தேநீர் கொண்டு வந்திருந்தார்கள். அதில் இரண்டு கப் தேநீரைக் கொண்டுபோய் ரெஜினாக்காவிற்கும் டானியல் அண்ணருக்கும் கொடுத்தான் ஆனந்தன். மறுபேச்சுப் பேசாமல் இருவரும் அதை வாங்கிக் கொண்டனர். கலாவின் உடல் நல்ல நிலையில் இல்லாததால் அன்றே ஈமச் சடங்குகளைச் செய்வதாக டானியல் அண்ணர் சொன்னார்.

பாடசாலையில் இருந்து அதிபர், ஆசிரியர்கள், பிள்ளைகளின் பெற்றோர் என்று நிறையப்பேர் வந்தி



ருந்தனர். இறுதிப் பூசைக்காக உடல் தேவாலயத்திற்கு கொண்டு போகப்பட்டது. பூசை நடக்கும் நேரத்தில் ஆனந்தன் பாடசாலைக்குப் போய் வெண்ணிலாவைக் கூட்டி வந்து வீட்டில் விட்டான். பரீட்சையை நன்கு எழுதிய சந்தோசத்திலோ என்னவோ அவள் ஆனந்தனிடம் எதுவும் கேட்கவில்லை. இல்லையென்றால் அன்றைய தினம் எப்படி இருந்தது என்று கேட்டு கேள்விகளால் துளைத்திருப்பாள்.

கலாவை அடக்கம் பண்ணியாயிற்று. இன்னமும் அவள் குழந்தைதான். வாழ்வின் இன்ப துன்பங்களை அவள் அனுபவிக்கவேயில்லை. தப்பான வாழ்க்கை முறை அவளின் வாழ்க்கையையே காவு வாங்கிவிட்டது. இப்படி எத்தனை சாவுகள் விழுகின்றன? இருந்தும் திருந்துகிறார்கள் இல்லையே.

அன்றும் அவனால் வேலைக்குப் போக முடியவில்லை. அதனால் நேரத்துடன் சாந்தியைப் பார்க்கப் புறப்பட்டான். சாந்தி பிரகாசமாக இருந்தாள்.

''நாளைக்கு நான் வீட்டை போகலாம் எண்டு சொல்லீட்டினம். நேரத்தோட வந்து என்னைக் கூட்டிக்கொண்டு போங்கோ...''

அவனின் முகம் வாடி இருப்பதை உணர்ந்து அவள் துருவித்துருவிக் கேட்டபோது கடகடவென்று எல்லாவற்றையும் ஒப்பித்துவிட்டான் ஆனந்தன். கலாவின் இறப்பு அவளுக்கும் பெரிய அதிர்ச்சிதான். அதைவிடவும் பெரிய அதிர்ச்சி கலா போதைப்பழக்கத்துக்கு அடிமையாகி இருந்தாள் என்பதுதான்.

''இவ்வளவு காலமா உங்களுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு. எதுகும் சொல்லாமல் மறைச்சு இருந்திருக்கிறீங்கள்... '' ஆதங்கப்பட்டாள் சாந்தி.

மறுநாள். காலையிலேயே சாந்தியை வீட்டிற்கு கூட்டி வந்தாயிற்று. வெண்ணிலாவுக்கு அன்று பரீட்சை இல்லை. சாப்பாட்டிற்கும் ஒழுங்கு செய்து விட்டதால் இப்போதைக்கு வீட்டைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சுப்பிரமணி ஐயாவின் கொட்டில் வேலையை இன்றே முடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று புறப்பட்டான் ஆனந்தன். தவிரவும் இராசமணி அம்மாவும் ஏதோ கதைக்க வேண்டும் என்றா. அவனுக்கிருந்த பிரச்சனையில் அவன் அதை மறந்தே போய்விட்டான்.

அவன் வேய்ந்திருந்த குடிலைப் பார்க்க அவனுக்கே பெருமிதமாக இருந்தது. அவ்வளவு நேர்த்தியாக வந்திருந்தது. இருக்கும் மிச்ச இடத்தையும் வேய்ந்து முடித்தால் அற்புதமாக இருக்கும். கொஞ்ச நேரத்திலேயே அந்த வேலையும் முடிந்துவிட, இவ்வளவுதானா இன்றைய வேலை என்று கொஞ்சம் வருத்தமாகவும் இருந்தது.

''தம்பி வசந்தன்! வேலை முடிஞ்சுது எண்டு ஓடாதையும். சின்னன் சின்னனா நிறைய வேலையள் கிடக்கு. உதுகளைச் செய்து முடிக்க என்னாலை ஏலாது. ராசத்துக்கு அது ஒரு கோவம். நீர் நிண்டு அவ என்ன கேக்கிறாவோ அதைச் செய்து குடும். என்ன...? என்னப்பா...! சரியா? இப்ப எங்கள் ரெண்டு பேருக்கும் தேத்தண்ணி கொண்டு வாரும்...'' இராசமணி அம்மாவுக்கு அன்புக் கட்டளையிட்டார் சுப்பிரமணி ஐயா.

''ராசம்...! நான் ஒருக்கா விதானை ஒஃபிஸ் வரைக்கும் போக வேண்டியிருக்கு...''

இருவருமாக தேநீர் அருந்தியதும் சுப்பிரமணி ஐயா வெளியே போக ஆனந்தன் வேலையில் இறங்கினான். அம்மா சொன்னது சரிதான். சிறிது சிறிதாக ஊறிப்பட்ட வேலைகள் இருந்தன. வயதானவர்கள் தனியாக இருக்கும் வீடுகளில் இப்படித்தான் உதவிக்கு ஆளில்லாது கஷ்டப்படுவார்கள் போலும்.

''அம்மா..! என்னவோ கதைக்க வேணும் எண்டியள்...'' கதையைத் தொடங்கினான் ஆனந்தன்.

''எல்லாம் என்ரை பிள்ளையளைப் பற்றித்தான் தம்பி... இவங்களால ஒருத்தருக்கும் நிம்மதியில்லை... என்னத்தைச் சொல்ல? மன உளைச்சல்தான் மிச்சம்...''

''அந்தாள் ஒண்டும் வெளிப்படையாக் கதைக்கிறேல்லை மனசுக்கை மறுகுறார்...''

அவர்களின் மூன்று பிள்ளைகளுமே அவர்களைப் பார்ப்பதில்லையாம். மூத்தவர்கள் இருவரும் லண்டனில். இளையவன் அமெரிக்காவில். படிப்பில் அவர்கள் ஏற்கனவே கெட்டி. வெளிநாட்டில் தொடர்ந்து படித்து நல்ல சம்பளத்துடன் நல்ல உத்தியோகத்தில் இருக்கிறார்களாம்.

''நீங்கள் காசு கழஞ்சு தரவேண்டாம். அப்பான்ரை பென்சன், காணிக்குளால வாற வருமானத்தை வைச்சு நான் ஒப்பேத்திப் போடுவன். இந்த கஸ்டமான நேரத்தில சாமான் சக்கட்டுகள் என்ன விலை விக்குது...? ஆ...? நீங்கள் எப்பிடிச் சமாளிக்கிறீங்கள்.? ஏதும் உதவி செய்யட்டோ எண்டு ஒரு கேள்வி...? அது காணுமல்லோ? நீரே சொல்லும் தம்பி!''

ஆனந்தனுக்கு என்ன பதில் சொல்வது என்றே புரியவில்லை. இராசமணி அம்மா தொடர்ந்தா.

''மூத்தவன் தன்ரை எண்ணத்துக்கு அங்க ஒருத்தியைக் கட்டினான் ... எங்கடை தமிழ்ப் பெட்டைதான். நாங்கள் கை நனைக்காத ஆக்கள். வசந்தன்! சாதிக் கதை கதைக்கிறது உமக்குப் பிடிக்காது... எனக்குத் தெரியும். நாங்களும் சரி, அவனுக்குப் புடிச்சிருக்கு, கட்டீட்டான் எண்டு விட்டால் நீ ஒழுங்காவல்லோ குடும்பம் நடத்த வேணும். கண்டபாட்டுக்கு செலவு செய்யிறதும், பார்ட்டியள் எண்டு கூத்தடிக்கிறதும்... என்ரை பிள்ளை திறம் எண்டு நான் சொல்லேல்லை. கொஞ்சம் தடுமாறுற ஆம்பிளையும் பொஞ்சாதி சரியா இருந்தால் சரியான வழிக்கு வந்திடுவான். இல்லையோ?

நீ என்ன செய்யிறாய்? அவனுக்குப் போட்டியா



நீ கூத்தடிக்கிறாய். வீட்டில நித்தம் சண்டையாம். பிள்ளையள் எப்பிடி சரியா வளரும்? அப்பன் குடி வெறியில எங்கயோ விழுந்து கிடக்கிறான். அம்மா ஊர் சுத்திப்போட்டு ஏமஞ்சாமத்தில வீட்ட வாறா''

''அம்மா..! ஆரும் உங்களுக்கு மிகையாகச் சொல்லி யிருப்பாங்கள்... அவ்வளவுக்கு இருக்காது...'' சொன்ன ஆனந்தனை இடைமறித்தா இராசமணி அம்மா.

''மூத்தவன்ரை ஃபிரண்ட் வந்தவன். சின்னனில இருந்து ரெண்டுபேரும் ஒண்டாச்சுத்தினவங்கள். அவன் சரியா மனவருத்தப்பட்டவன்.... ஒருக்கா மூத்தவனை பொலிஸ் பிடிச்சு இவன்தான் மீட்டு எடுத்தவனாம். ஒழுங்கில்லாத வாழ்க்கையால கடன் தலைக்கு மேல ஏற, நித்தமும் கடிபுடிதானாம்.''

''மற்றவன் வீடு வாசல், கார் பங்களா எண்டு நல்லா இருக்கிறான். இப்ப கலியாணம் செய்யேல்லையாம். உனக்கு வயசு என்ன ஆகுது...? இல்லைக் கேக்கிறன்,.. என்ன சின்ன வயசே உனக்கு...? சம்பாதிச்சு உல்லாசமா இருந்தாக் காணுமோ...?பக்கத்தில கொண்ணன் இப் பிடிச் சீரழிஞ்சுபோய்க் கிடக்கிறான். ஒரெட்டு போய்ப் பார்த்தா என்ன...? தன்ரை கௌரவம் குறைஞ்சு போடு மாமல்லே? அவர் சொல்லுறார். சரி வேண்டாம். ! சித்தப்பன்தானே நீ..? அந்தப் பொடியளைப் பாத்து ஒரு அஞ்சைப் பத்தைக் குடுத்து, ஒரு உடு துணியை வாங்கிக் குடுத்து அந்தப் பிள்ளையளுக்கு கொஞ்சம் உறுதுணையா இருக்கலாம் அல்லோ?

''அம்மா...! கொஞ்சம் பொறுங்கோ! இப்பிடி ரென் ஷன் ஆகினா உங்களுக்கு ஏதேனும் வந்திடும்... '' ஆவேசமாகக் கதைத்த இராசமணி அம்மாவை ஆசுவா சப்படுத்தினான் ஆனந்தன்.

''இளையவன்.அவனும் தன்ரை எண்ணத்துக்கு ஒருத் தியைக் கட்டினான்...''

''மனசுக்குப் பிடிச்சவையைக் கட்டுறது தப்பில்லை அம்மா...! மனசு பொருந்தி இருக்கிறது நல்லது தானே...?''

''இப்ப அதை ஏற்றுக்கொள்ளுற மனநிலை எங்களுக்கு வந்திட்டுது. ஆனா அது பொருத்தமான ஆளாவுமல்லோ இருக்க வேணும். இவன் தன்னை விட பத்து வயசுக்கு மேல மூத்த ஒருத்தியைக் கட்டியிருக்கிறான். அவளுக்கு ஏற்கனவே பன்ரெண்டு வயசில ஒரு பிள்ளை இருக்கு. முதல்லை எல்லாம் நல்லாத்தான் போச்சுதாம். பிறகு அந்தப் பெட்டையால பிரச்சனை தொடங்கிச்சுதாம்.

மாசத்தில பாதி நாள் அவள் வீட்டாலை ஓடுறதும் இவை தேடுறதும் எண்டு பொழுது போகுதாம். அவள் ஒருத்தரின்ரை சொல்லும் கேளாளாம். இவன் ஏதும் கதைச்சால் 'நீ பிழையா நடக்கப் பாத்தனீ' எண்டு மாட்டி விட்டுடுவன் என்னுறாளாம். ஏதோ சீர்திருத்தப் பள்ளி யில இருந்து இப்ப கொஞ்சம் மாற்றம் இருக்குது எண்டு பெடியன் கடிதம் போட்டிருக்கிறான். ஒரு இடமாற்றத் துக்காக இங்க லீவில வரப் போகினமாம். இதுக்குத்தான் இந்தக் குடில் கட்டினது...''

''அப்ப பிறகு என்னம்மா? மகன் வரப்போறார்... எல்லாம் போகப்போகச் சரியாகீடும்''

''நான் அவையின்ர படத்தைக் காட்டுறன் அதுக்குப் பிறகு சொல்லும்''

விடுவிடென்று உள்ளே சென்ற இராசமணி அம்மா ஒரு புகைப்படத்துடன் வந்தா. படத்தைப் பார்த்தவு டன் ஆனந்தனும் ஒருகணம் துணுக்குற்று விட்டான். புகைப்படத்தில் வயதான தோற்றத்தை மறைக்க அதீத அரிதாரம் பூசிய ஒரு ஆபிரிக்க இனத்துப் பெண்ணும் அம்மாவின் இளைய மகனும் இருந்தனர். அவர்களுடன் இருந்த இளைய பெண்ணுக்கு பன்னிரண்டு வயதுதான் என்று சொல்ல முடியாது. நல்ல திடகாத்திரமான உடம் புடன் மாநிறமாக இருந்தாள் அவள். அவளின் முடிதான் அவள் ஆபிரிக்க இனத்தவள் என்று காட்டிக் கொடுத்தது.

''பாத்தியோ தம்பி! படத்திலயே அவளின்ரை மகன் மாதிரிக் கிடக்கு... இங்க வரட்டும்... ஒருமாதிரி மனதை மாத்தி அவனைப் பிரிச்சு எடுத்திடோணும்... அம்மனுக்கு காசு முடிஞ்சு வைச்சிருக்கிறன்... அவர் தான் பிள்ளையளை ஒருக்காவெண்டாலும் பாத்திட வேணும் எண்டு துடிக்கிறார்... மற்றவங்கள் வரப்போ றேல்லை.... இவனெண்டாலும் வரட்டும் என்னுறார். எக்கணம் ஊர்க்காரர் எத்தினை கதை கதைப்பினம் எண்டு நினைக்கவே கலக்கமாக் கிடக்கு...''

இராசமணி அம்மா சொல்லி முடிக்கவில்லை, கேற்ற டியில் யாரோ அவசரமாகக் கூப்பிடும் குரல் கேட்டது.

''அங்க இந்த வீட்டு ஐயா மயங்கி விழுந்திட்டார். ஆராவது உடனை வாங்கோ!! '

தொடரும்.....



# திருக்கோவிலால் காப்பாற்றப்பட்ட டாக்டர் ஜெயகுலராஜா மறைவு



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் திருக்கோவிலுக்கும் முக்கிய இடம் உண்டு. அந்த வகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை - 16 ஆம் திகதி பிரிந்த வைத்திய கலாநிதி ஜெயகுலராஜாவை பற்றி நினைக்கையில் திருக்கோவிலையும் தவிர்த்துவிட முடியாது.

திருக்கோவிலைச் சேர்ந்த எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜாவுக்கும் கணுக்கேணி, தண்ணீரூற்றை சேர்ந்த றோஸ் மனோன்மணிக்கும் மகனாக பிறந்தவர்தான் இந்த டானியல் ஜேசன் ஜெயகுலராஜா. இவரது சகோதர, சகோதரிகள் றோஸ் மிருணாளினிதேவி (பாக்கியம்), மேரி பத்மினிதேவி, பெஞ்சமின் ஜெயனந்தராஜா, சாமுவேல் ஜெயதிலகராஜா, ஜோய்ஸ் ஜெயகுமாரி ஆகியோராவர்.

தனது மைத்துனி முறையான கிறிஸ்டினா ஞானதிலகராணியை இவர் திருமணம் செய்தார். இந்தத் தம்பதியருக்கு டானியல் ஜேசன் என்ற மகன் பிறந்தார்.

27.10.1982 அன்று நடைபெற்ற சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் சீலன், புலேந்திரன், ரகு (குண்டப்பா) ஆகிய போராளிகள் காயமடைந்தனர். முப்படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ். குடாநாட்டில் காயமடைந்த இவர்கள் மூவரையும் காப்பாற்றுவது இலகுவான விடயமல்ல. மேலதிக சிகிச்சைக்காக தமிழகத்துக்கு அனுப்பும்வரை தேவையான வைத்தியத்தை மேற்கொள்ள வேண்டும். இப்பணியில் டாக்டர் ஜெயகுலராஜா, அவரது சகோதரர் போதகர்

சங்கரன்

ஜெயதிலகராஜா, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் அவரின் துணைவியாக விளங்கிய நிர்மலா ஆகியோர் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டனர்.

போராளிகள் காயமடைந்ததால் அதற்குத் தேவையான மருந்துகளைப் பெற முயற்சிப்பர் எனக் கருதிய உளவுத் துறையினர் மருந்தகங்களை கண்காணித்தனர். குறிப்பிட்ட வகை மருந்துகளை கொள்வனவு செய்தவர் யார் என ஆராய்ந்தனர். அந்த வகையில் வண. பிதா சிங்கராயர் கைதானார். அதன் தொடர்ச்சியாக வண. பிதா சின்னராசாவும் மேற் குறிப்பிட்ட அனைவரும் கைதாகினர்.

வெலிக்கடை சிறையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளின் போது நடத்தப்பட்ட எதிர்த் தாக்குதலினால் தான் இவர்களாவது உயிர்தப்ப முடிந்தது. இந்த நடவடிக்கைகளின் போது 54 தமிழ் சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர். தமிழினம் எதிர்த் தாக்குதல் நடத்தாவிட்டால் உயிர் பிழைக்க முடியாது என்பது அன்று கற்றுக்கொண்ட பாடம். இந்த இனம் தன்னைத் தற்காத்துக் கொள்ள நடத்திய போராட்டத்தைத்தான் 2009 இன் பின்னர் அரசியலுக்குள் புகுந்தோர் வன்முறை என்று முகம் சுழிக்கின்றனர்.


வெலிக்கடை சிறைப் படுகொலை சர்வதேசத்தில் ஏற்படுத்திய தாக்கத்தாலோ என்னவோ எஞ்சியிருந்த தமிழ் அரசியல் கைதிகள் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டனர். மீண்டும் தென்னிலங்கை சிறைக்கு மாற்றப்படலாம் என்ற காரணத்தாலும் தமது எஞ்சிய காலத்தை விடுதலைக்காக மீண்டும் பயன்படுத்தலாம் என்பதாலும் சகல இயக்கத்தவர்களும் தொடர்பு பட்டவர்களும் சிறையை உடைத்து தப்பிப்பதென முடிவெடுத்தனர்.

இந்த நடவடிக்கையில் புலிகள் சார்பானோருக்கு சிறைக் காவலர்களை கட்டி வாயில் பிளாஸ்டர் போடும் பணி வழங்கப்பட்டது. பெண்கள் விடுதியில் இருந்த நிர்மலாவை மீட்கும் பொறுப்பு புளொட் இயக்கத்தைச் சேர்ந்த மாணிக்கதாசனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதுபோல், டக்ளஸ் போன்றோருக்கும் குறிப்பிட்ட பணி ஒதுக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது மாணிக்கதாசனை தவிர மற்ற எல்லோரும் தமக்கு வழங்கப்பட்ட பணியை நிறைவேற்றினர்.

தனிக்குழு ஒன்றை அமைத்து செயற்பட பரமதேவா புலிகள் சார்பானோரை அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றார். இவர்களை பொறுப்பேற்க ஒரு குழுவினர் சென்றனர். எனினும் சகோதரர்களான தானும் ஜெயதிலகராஜாவும் ஒன்றாகப் பயணிக்கக் கூடாது என டாக்டர் முடிவெடுத்தார். இடையில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் இருவருமே பலியாக வேண்டுமே என யோசித்தார்.

தனித்தனியாக பயணிப்பதை போதகரும் ஏற்றுக்கொண்டார். பாதுகாப்பான தங்குமிடங்களில் ஒன்றாக திருக்கோயிலும் இருந்தது. மட்டக்களப்பிலிருந்து திருக்கோயிலுக்கு படகில் செல்வதென முடிவெடுக்கப்பட்டது. இன உணர்வாளரான ஒரு முஸ்லிம் சகோதரர் இப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். திருக்கோயிலுக்கு படகு சென்றதை அரசின் உளவாளியான பனிக் கோபால் கண்டு கொண்டார்.

இதனை அவதானித்த அப்பகுதி மக்கள் எல்லாத் தடயங்களையும் இல்லாமல் அழிப்பதற்கு மிக வேகமாக செயற்பட்டனர். இந்த நிலையிலும் டாக்டருக்கு அறிமுகமான ஆனந்தப் போடியார் என்று அழைக்கப்படும் இராஜதுரை



ஆனந்தராஜா பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இந்த நிலையில், டாக்டரை தவிர ஏனையோரை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சந்தோசம் திருமலை வழியாக அவர்களை அழைத்துச் சென்றார். டாக்டரை இன்னொரு போராளி பொறுப்பெடுத்துக் கொண்டார். இந்த நடவடிக்கைகளின்போது தனது வாகனத்தையும் பல்வேறு உதவிகளையும் வழங்கி உதவினார் ஆனந்தப் போடியார். பஸ், கார், கால்நடை எனப் பல வழியிலும் பயணம் மேற்கொண்டு மன்னார் பரப்புக்கடந்தானை சேர்ந்தார் டாக்டர். பின்னர் கல் ஏற்றும் லொறி, பஸ், வள்ளம் எனத் தொடர்ந்த பயணம் முதலில் யாழ்ப்பாணத்தையும் பின்னர் படகின் மூலம் தமிழகத்திலும் நிறைவடைந்தது.

தமிழகத்துக்கு பயணமான இவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், மருத்துவப் பிரிவு போன்றவற்றின் ஆரம்பப் பணிகளில் மிகத் தீவிரமாகச் செயல்பட்டார். இப் பணிகளில் பாலா அண்ணா, அடேல் அன்ரி ஆகியோரின் ஒத்துழைப்பும் இருந்தது.

நாடு திரும்பியபின் சென். ஜோன்ஸ் சுண்டுக்குளி பாடசாலைகளின் நிர்வாக பணிகளிலும் ஈடுபட்டார். தொடர்ந்து முல்லை மாவட்ட வைத்திய அதிகாரியாக (MOH) நியமிக்கப்பட்டார். ஏற்றிருந்த பொறுப்புகள் மூலமாகவும் விடுதலைப் பணிகள் வாயிலாகவும் மக்கள் மனதில் இடம்பிடித்த இவரை என்றென்றும் மறக்காது தமிழினம்.

மட்டக்களப்பு சிறையுடைப்பைத் தொடர்ந்து விடுதலைக்கான பங்களிப்பில் பெரும் பங்காற்றிய ஆனந்தப் போடியாரின் இழப்பை பெரும் துயரமாகவே உணர்கின்றனர் கிழக்கு மாகாண போராளிகளாக விளங்கியோர். விடுதலைப் போராட்டம் மௌனிக்கும் வரை (இந்திய இராணுவ காலம் உட்பட) நிதியாகவும் பொருளாகவும் நிலமாகவும் ஏதோவொரு வகையில் பங்களித்த ஆனந்தப் போடியாரின் நினைவுகள் என்றென்றும் மனதில் இருக்கும்.

அதேவேளை, ஆலயத்தில் கேட்கும் கணீரென்ற குரல், பொது விடயங்களுக்காக வாரி வழங்கும் வள்ளல் தன்மை போன்றவற்றால் என்றும் மறக்க முடியாதவராக இருக்கும் ஆனந்தப் போடியார் குறைந்தபட்சம் இரு தலைமுறைகளில் தனது பெயரைப் பதித்து வைத்துள்ளார். அவரின் மறைவு நிகழ்ந்து ஓராண்டு நெருங்கும் வேளையில் டாக்டரின் மறைவு அனைவரையும் துயரில் ஆழ்த்தியுள்ளது.



யாழ்ப்பாணம் - நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவில் இரதோற்சவ பெருவிழா பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோத்துக்கு மத்தியில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.







